வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 26.08.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 262 பக்கங்கள் : 16







உலகப் புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் தேர் திருவிழா நேற்று நடைபெற்றபோது...! (மேலும் படங்கள் பக்கம் 7இல்) படங்கள்: எல். ஜெகன்

## நல்லூர் கந்தன் தேர் திருவிழா; பல்லாயிரம் பக்தர்கள் திரள்வு

யாழ்ப்பாணம், ஓக. 26

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

நேற்று காலை 6.15 மணிக்கு ஆரம்பித்த பூசையை தொடர்ந்து, வசந்த மண்டப பூசை நடைபெற்று ஆறு முகப் பெருமான வள்ளி, தெய்வானை சமேதராய் காலை 7 மணிக்கு தேரில் ஆரோகணித்தார்.

பக்தர்களுக்கு அருள்பாலித்தவாறு தேரில் உலா வந்த முருகப்பெருமான் காலை 9.45 மணிக்கு இருப்பிடம் வந்தார்.

திருவிழாவில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள்அங்கப் பிரதட்சணம் செய்தும்கற்பூர சட்டிகள் ஏந்தியும் அடியடித்தும் பால் காவடி, தூக்கு, பறவை காவடி என விதவிதமான காவடிகள் எடுத்தும் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

15

# சைபர் போருக்கும் படைகள் தயாராக இருக்க வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஓகஸ்ட் 26

**“எதிர்காலத்தில் தரை, வான், கடல் மாத்திரமன்றி சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம். எனவே, எமது படையினர் அவ்வாறான தொழில்நுட்ப யுத்தத்துக்குத் தேவையான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்”, என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகதுக்கு ஜனாதிபதி வர்ணம் வழங்கல் மற்றும் பல்கலைக்கழக வர்ணம் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில், பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்ட காலத்தில் போராடிய

15

## ஜனநாயகத்தின் பெயரால் நடந்தது பயங்கரவாதமே!

### பொதுஜன பெரமுன சாடல்

கொழும்பு, ஓக. 26

ஜனநாயக போராட்டம் என்ற பெயரில் பயங்கரவாத செயல்பாடுகளே முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் குறுகிய அரசியல் நோக்கம் காணப்பட்டமை தற்போது உறுதிப் படுத்தப்பட்ட வண்ணம் உள்ளது என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தி

15

## எரிபொருள் கியூ. ஆர். குறியீடு திருட்டை பிடிக்க புதிய முறை!

கொழும்பு, ஓக. 26

எரிபொருள் வாங்குவதற்கு பிறரின் கியூ. ஆர். குறியீட்டை பயன்படுத்துபவர்களை கண்டறிய உதவும் புதிய முறைமையை அறிமுகப்படுத்த மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சிலர் திருடப்பட்ட கியூ. ஆர். குறியீடுகளை பயன்படுத்தி எரிபொருள் வாங்குவதாக மக்கள் தொடர்ந்து முறைப்பாடுகளை அளித்ததால் இந்த முறைமை அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

புதிய முறை

15

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஆணையரின் பதவி காலம் நிறைவு



ஜெனிவா, ஓக. 26

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அம்மையாரின் பதவிக் காலம் அடுத்த வாரத்துடன் நிறைவடைகிறது. இதனால், அவர் நாடு

15

## சிறுவரை பணிக்கு அமர்த்திய ஐந்து பேருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஓக. 26

கைக்குழந்தை உள்ளிட்ட 7 சிறுவர்களை வைத்து யாழ்ப்பாணம் மாநகரம், நல்லூர் ஆலய சூழலில் ஊதுபத்தி வியாபாரம் செய்த 3 பெண்கள், ஆண் ஒருவர் மற்றும் அவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் என ஐவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்திய குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

15

## வரும் திங்கட்கிழமை முதல் மின்வெட்டு நேரம் குறையும்?

கொழும்பு, ஓக. 26

நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தில் பழுதடைந்த ஜெனரேட்டரின் திருத்தப்பணி முடிவடைவதால், எதிர் வரும் திங்கட்கிழமை முதல் தேசிய மின் கட்டமைப்புடன் அது மீண்டும் இணைக்கப் படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பொறியியலாளர்கள் தற்போது திருத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரை மேற்கோள் காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்

15

## ரஞ்சன் ராமநாயக்க இன்று விடுதலை?

கொழும்பு, ஓக. 26

நடிகராக இருந்து அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் இன்று விடுதலை செய்யப்

15

## மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு?

கொழும்பு, ஓக. 26

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் டீசல் மற்றும் பெற்றோல் ஆகிய இரண்டு வகையான எரிபொருள்கள் மொத்தமாக கிடைப்பதில்லை என இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின், தனியார் தாங்கிகள் உரிமையாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் டி.வி. சாந்த சில்வா தெரிவித்தார்.

இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

15

## உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி!

கொழும்பு, ஓக. 26

இலங்கை மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 04 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருத்துவப் பொருட்கள் வழங்கப்படும் என உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் டெட்ரோஸ் அதானம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றமைக்காக அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## உலக சுகாதார...

இலங்கைக்கு வழங்கப்படும் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்யும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், விநியோகிப்பதற்கான திகதிகள் மற்றும் பெயர்கள் பற்றிய விபரம் உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகத்தினால் அறிவிக்கப்படும் எனவும் இந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்றுநோய் பரவலினால் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார அழுத்தத்தை உலக சுகாதார அமைப்பு ஏற்றுக்கொள்வதாகவும், சர்வதேச சந்தையில் உணவு மற்றும் எண்ணெய் விலை உயர்வு, பாதிக்கப்படக்கூடிய சமூகத்திற்கு பெரும் சவாலாக இருப்பதாகவும், அந்த சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு உதவிகளை வழங்க உலக சுகாதாரம் அமைப்பு தயாராக உள்ளதாகவும் டெட்ரோஸ் அதானம் கூறியுள்ளார்.

இலங்கை மக்களின் அத்தியவசிய சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளத் தேவையான அவசர உதவிகளை வழங்குமாறு "உலக சுகாதார அமைப்பின் அவசரகால சுகாதார வேலைத்திட்டத்திற்கு" பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்த பணிப்பாளர் நாயகம், உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகம் மற்றும் ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து அத்தியவசிய மருத்துவப் பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சுகாதாரக் கட்டமைப்பின் செயல்திறன் மற்றும் தாங்கிக்கொள்ளும் திறன் உள்ளிட்ட மக்களுக்கு ஏற்படும் சுகாதார பிரச்சினைகளை உலக சுகாதார அமைப்பு உன்னிப்பாகக்கண்காணிப்பதாகவும், இலங்கையில் மாகாண சுகாதார சேவைகளை வலுப்படுத்தத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை உலக சுகாதார அமைப்பு வழங்குவதாகவும் வைத்தியர் டெட்ரோஸ் அதானம் மேலும் குறிப்பிட்டார். (அ)

## சிறுவரை...

அத்துடன், கைக்குழந்தை உள்ளிட்ட 7 சிறுவர்களை நேற்று சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் வைக்க உத்தரவிட்ட யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, நேற்று வியாழக்கிழமை அவர்களை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் பாரப்படுத்துவதற்காக மன்றில் முற்படுத்த கட்டளையிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரின் ஐந்து சந்திப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள பெண்கள், சிறுவர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டு ஊதுபத்தி வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று பல முறைப்பாடுகள் வழங்கப்பட்ட போதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்த விடயம் வட மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூரியவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவரின் உத்தரவில் நேற்று முன்தினம் 3 பெண்கள், ஆண் ஒருவர் மற்றும் விடுதி உரிமையாளர் என ஐவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்த கைக்குழந்தை உள்பட 8 வயதுக்குட்பட்ட 7 சிறுவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் எடுக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. நா. மனித...

திரும்பவுள்ளார்.

பதவிக் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கு மீண்டும் அந்தப் பதவியை வகிக்க வாய்ப்பு வழங்கப்படவிருந்தபோதும், இதனை நிராகரித்த அவர் தனது தாயகமான சிலிக்கு செல்லவுள்ளாரென்று கூறியுள்ளார்.

இலங்கையின் இறுதிப் போர் காலத்தில் இடம்பெற்றவை என்று கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள், மனித குலத்துக்கு விரோதமான நடவடிக்கைகள், இனப் பிரச்னை தொடர்பாக பச்லெட் அம்மையார் கரிசனை கொண்டிருந்தார். இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கவலைகள் - கண்டனங்களையும் வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், "ஒரு பெண்ணாகவும் வாழ்நாள் முழுவதும் பெண்ணியவாதியாகவும் நம் அனைவருக்கும் பயனளிக்கும் சமூக இயக்கங்களில் முன்னணியில் இருந்த பெண் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு நான் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

அவர்கள் பெரும்பாலும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் - கேட்கப்படாத குரல்களை கொண்டுவந்தவர்கள். நான் தாயகம் திரும்புகிறபோதும் உங்களுடன் தொடர்ந்தும் நிற்பேன். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான எனது பயணம் இத்துடன் நிறைவடையாது என்றும் அவர் கூறினார். (ஐ)

## சைபர் போருக்கும்...

பல அதிகாரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். எனவே, இந்தப் பல்கலைக்கழகத்தை நாம் பாதுகாக்க வேண்டும். மேலும், திறமையான அதிகாரிகளை நமது இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

"ஓர் இராணுவத்தை வழிநடத்த வேண்டுமானால், அது இராணுவ தலைமையைப் பொறுத்துள்ளது. மேலும், அந்த இராணுவத்துக்கு ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் இல்லாமல் இராணுவம் முன்னேற முடியாது. ஓர் இராணுவம் ஒழுக்கத்துடன் மட்டுமே முன்னேற முடியும். மேலும், இராணுவத்தை ஒழுக்கத்தால் மட்டும் வழிநடத்த முடியாது. ஒழுக்கத்துடன் பயிற்சியும் தேவை. ஓர் இராணுவம் ஒழுக்கமும் பயிற்சியும் பெற்றாலும் வெற்றியடைய முடியாது. அந்த இராணுவத்துக்கு அறிவு இருக்க வேண்டும். இராணுவ அறிவு மற்றும் பிரதேச அறிவு இருக்க வேண்டும். அந்த அறிவுடன் வெற்றி கிடைக்கும்.

"இங்குள்ள தலைவர்களுக்கு ஒழுக்கம், பயிற்சி மற்றும் அறிவு கொடுக்கப்படுகிறது. அங்கிருந்து, இராணுவம் அனைத்துப் பிரிவுகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்குகிறது. சிலர் இராணுவத் தளபதிகளாக மாறுகிறார்கள். மற்றவர்கள் இந்தப் பட்டத்துடன் பல்வேறு துறைகளில் சென்று சேவை செய்கிறார்கள்" என்றும் அவர் கூறினார். (ஐ)

## ரஞ்சன்...

படவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பின்னர் அவரை விடுதலை செய்தவற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன என்றும், அதற்கான இறுதி ஆவணங்களுக்கான அனுமதிக்காக காத்திருப்பதாகவும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், ரஞ்சன் ராமநாயக்க வெள்ளி (இன்று) அல்லது திங்கட்கிழமை விடுதலை செய்யப்படலாம் என்று அவரின் நண்பரும் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ முன்னர் தகவல் வெளியிட்டிருந்தார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லூர் கந்தன்...

தேர்த்திருவிழாவில் யாழ்ப்பாணம் மட்டுமின்றி நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

இதேசமயம், இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனாவுக்கு 6 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 26

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 6 பேர் உயிரிழந்தனர்.

இதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 674 ஆக உயர்ந்துள்ளது.

இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மீள வெடிக்கும் நாள் தூரமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக. 26




அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக மீண்டுமொரு மக்கள் எழுச்சி போராட்டம் ஆரம்பமாகப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்துக்கு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை கிடையாது. மாறாக நாட்டைக் கட்டியெழுப்புவதைப் போன்று போலி நாடகமே அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் கூறினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

ஒருபுறம் சர்வகட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுபுறம் இளைஞர்களுக்கு எதிரான அடக்குமுறையைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறார்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்வதே , தற்போது பொலிஸாரின் பிரதான கடமையாகவுள்ளது.

இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டு போலியாக , சர்வகட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டாம் என்று ஜனாதிபதியிடம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசாங்கத்துக்கு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை கிடையாது. நாட்டைக் கட்டியெழுப்புவதைப் போன்று போலி நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு சர்வதேசம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலும் இது தாக்கம் செலுத்தும். காரணம் சர்வதேச நாணய நிதியம் என்பது தனியொரு நிறுவனம் அல்ல. மேற்குலக நாடுகள் பல அதில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இந்த நாடுகள் இலங்கை மீது தொடர்ந்தும் அதிருப்தி கொள்ளுமாயின், அது எமக்கு பாரிய அழுத்தமாக அமையும். அரசாங்கம் நாட்டை மேலும் மேலும் வீழ்ச்சியடைச் செய்வதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி செயலகத்திலும் நீச்சல் தடாகத்தில் நீராடியவர்களையும் அங்குள்ள கட்டிலில் உறங்கியவர்களையும் கைது செய்வதில் காண்பிக்கும் ஆர்வத்தை ஊழல் மோசடிகள் தொடர்பில் எம்மால் சி. ஐ. டியில் அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரிப்பதில் காண்பித்தால் நாடு முன்னேற்றமடைந்துவிடும்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பயங்கரவாதிகளென்ற முத்திரை குத்தப்படுகிறது. பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த மக்கள், இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் எழுச்சி போராட்டங்களை முன்னெடுக்கப் போகும் காலம் வெகுதொலைவில் இல்லை - என்றார். (ஐ)

## மீண்டும்...

எனவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளன.

இதனால், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மீண்டும் நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார். (அ)

## எரிபொருள்...

மையின்படி எரிபொருள் வாங்கப்பட்ட தொகை, எரிபொருளை பெற்ற நேரம் நிரப்பு நிலையத்தின் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியவை கியூ. ஆர். உரிமையாளருக்கு செய்தியாக அனுப்பப்படும். இதை அடிப்படையாகக் கொண்டு சி. சி. ரீ. வி. காட்சிகளை சரிபார்த்து வாகனத்தை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கப்படும். வரும் வாரத்தில் இந்த முறைமை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வரும்...

துள்ளது.

இதன்படி, திங்கட்கிழமை முதல் பிரதான மின் கட்டமைப்புடன் 300 மெகாவாட்ஸ் மின்சாரம் சேர்க்கப்படும்.

இதனால் மின்வெட்டு நேரம் குறைவடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## ஜனநாயகத்தின்...

யாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்தவர்கள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அரசாங்கத்தை பலப்படுத்தி முழு நாட்டையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளார்கள்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர்மீது நம்பிக்கை கொள்ள முடியாது.

ஜனநாயக போராட்டத்துக்கு எதிராக அரசாங்கம் அடக்குமுறையை பிரயோகிப்பதாக எதிர்தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது. ஜனநாயக போராட்டம் என்ற பெயரில் பயங்கரவாத செயல்பாடுகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்துக்கு எதிரான சூழ்ச்சியை ஜனநாயக செயல்பாடு என குறிப்பிட முடியாது.

போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் பழிவாங்கலுக்காக கைது செய்யப்படுகின்றனர் என்று கூறப்படுவதை ஏற்க முடியாது. கைதுகளுக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது - என்றார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை திரும்பவிருந்தது தெரிந்ததே. கடந்த இருபத்தி நான்காம் திகதி அவர் கொழும்பு திரும்புவார் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் ஏற்கனவே அறிவித் திருந்தார்.

மீரிஹானையில் அவரின் பிரத்தியேக இல்லம் அமைந் திருக்கின்ற பகுதி கடந்த வாரமே பலத்த பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

நூற்றுக்கணக்கான படையினர் அந்தப் பகுதிகளில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தமை யையும் அவதானிக்க முடிந்ததாக அந்தப் பகுதிக்கு சென்று வந்திருந்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், அவரின் வருகையை சில வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருக்கிறார் எனவும், அவரின் கோரிக்கையின் பேரில் அவரின் வருகை தாமதப்படுத்தப்பட்டிருப்ப தாகவும் பின்னர் செய்திகள் வந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் ஜப்பான் நாட்டுக்கு பயணம் செய்யவிருக்கின்றார். அவர் ஜனாதி பதியாகப் பதவியேற்ற பின்னர் வெளிநாடு ஒன்றுக்கு செல்லவிருப்பது இதுவே முதல் தடவை.

இலங்கைக்கு கடன் வழங்கியிருக்கும் நாடுகளில் சீனாவும் ஜப்பானுமே முக்கியமான நாடுகள். இலங்கை யுடன் ஜப்பான் நீண்டகாலமாகவே நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதுடன், இலங்கையின் அபி விருத்திக்கு தொடர்ந்து உதவியும் வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுவந்த காலத்திலும் ஜப்பானின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

அதனால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக ஜப்பன் செல்ல முடிவெடுத்திருந்தார்.

தான் ஜப்பான் சென்று வரும்வரை கோட்டாபய நாடு திரும்புவதை ஒத்திவைக்கவேண்டும் என்று ரணில் கேட்டுக் கொண்டதனாலேயே அவரின் பயணம் தாமதப் படுத்தப்பட்டதாக கொழும்பு செய்தி ஒன்று தெரி வித்தது.

ஏற்கனவே, அமைச்சரவையை இறுதி செய்வதிலும், ஆளுநர் நியமனங்கள் போன்ற முக்கிய நியமனங்களை வழங்குவதிலும் தொடர்ச்சியாக நெருக்கடிகளைச் சந்தித்துவரும் ஜனாதிபதிக்கு பல்வேறு தரப்புக்களிலும் இருந்து வரும் அழுத்தங்களே அவற்றை இறுதி செய்வ தில் இழுபறி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கிவரும் பொதுஜன பெரமுன கட்சியில் அதிகாரம் செலுத்தக்கூடிய நிலையில் பலர் இருப்பதாலும், அவர்கள் ஒவ்வொருவரும் தத் தமக்கு வேண்டியவர்களுக்கு பதவிகளைப் பெற்றுக் கொடுக்க முனைவதாலும், பதவிகளை முடிவுசெய்வதில் இழுபறி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், கோட்டாபய நாடு திரும்பினால் அவ ரின் பங்குக்கு அவரும் தனது சில விருப்பங்களை நிறை வேற்ற முயலுவார் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. அதனால்தானோ என்னவோ கோட்டாபயவின் வரு கையை தாமதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் கேட்டி ருக்கலாம் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

அவரின் வருகை இப்படி தாமதமாகிக் கொண்டிருக்க மறுபுறத்தே அவர் தாயகம் திரும்பும்போது விமான நிலையத்தில் அவருக்கு பாரிய வரவேற்புக் கொடுக்க சிலர் பல்வேறு ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கின் றனராம்.

இரண்டாயிரத்து பதினைந்தில் மைத்திரியிடம் மகிந்த தோல்வியடைந்ததுமே, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை கோட்டாபய தொடங்கியிருந்தார். அதற்காக “வியத்மக“ போன்ற அமைப்புகளையும் ஆரம்பித்ததுடன், தெற்கில் கிரா மங்கள்தோறும் உள்ள பௌத்த விகாரைகளை ஒருங் கிணைத்து தீவிர பிரசாரங்களையும் முன்னெடுத்திருந் தார். அதனாலேயே தனி சிங்கள வாக்கில் அவரால் வெற்றிபெறமுடிந்தது. அந்த பௌத்த விகாரைகளை மீண்டும் ஒருங்கிணைத்து விமான நிலையத்தில் பாரிய வரவேற்பு வழங்கவும் விமான நிலையத்திலிருந்து பவனியாக கொழும்பு அழைத்து வரவும் தீவிர ஏற்பாடு கள் நடந்து வருகின்றன என்கிறார் கொழும்பில் பிரபல ஊடகர் ஒருவர்.

- ஊர்க்குருவி.

# கொரோனா தடுப்பூசிகள் காலாவதியாகும் நிலையில்!

கொழும்பு, ஓக. 26

தற்போது கையிருப்பில் உள்ள தடுப்பூசிகள் ஒக்ரோபர் 31ஆம் திகதியுடன் காலாவதி யாக இருப்பதால், கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் அளவை தாமதமின்றி பெறுமாறு சுகா தார நிபுணர்கள் நேற்று பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

அரச தகவல் திணைக் களத்தில் இடம்பெற்ற செய்தி யாளர் மாநாட்டில் பிரதம தொற்றுநோய் நிபுணர் சமித்த கினிகே இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதுவரை, இலங்கையின் மொத்த சனத்தொகையில் 20 வயதுக்கும் மேற்பட்ட 14.4 மில்லியன் பேரில் 8 மில்லிய னுக்கும் அதிகமானவர்கள் பூஸ்டரைப் பெற்றுள்ளனர்.

20 வயதுக்கு மேற்பட்ட சுமார் ஆறு மில்லியன் மக்கள் இன்னும் பூஸ்டர் டோஸ் பெற உள்ளனர். எனவே, தற்போது நாட்டில் ஏராளமான தடுப் பூசிகள் கையிருப்பில் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

60 வயதுக்கு மேற்பட் டவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்களுக்கு சுகா தார அதிகாரிகள் நான்காவது அளவைப் பரிந்துரைத்துள்ளதா கவும், 20 வயதுக்கு மேற்பட்ட வர்கள் ஆர்வமாக இருந்தால் நான்காவது அளவைப் பெற லாம் என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ஐ)

# கட்டுமான பொருள் இறக்குமதி கட்டுப்பாடுகள் சில தளர்ந்தன!

கொழும்பு, ஓக. 26

இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் நாட்டில் இறக்குமதி செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ள ‘டைல்ஸ்’ ( தரை ஓடுகள் ) உட்பட கட்டுமானத் தொழிலுக்குத் தேவையான பல வகையான மூலப்பொருட்கள் மற்றும் வாகனங்களை நிபந்தனைக்குட்பட்டு இறக்குமதி செய்வது தொடர்பான அதி விசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சபை திட்டங்கள் அல்லாத அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள், கலப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், ஹோட்டல் திட்டங்கள் மற்றும் அரசாங்கத் திட்டங்களுக்காக குறித்த இறக்குமதிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மீள் விற்பனை நோக்கத்திற்காக இது தொடர்பான சாதனங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இறக்குமதி செய்யக்கூடாது என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான கொடுப்பனவு 180 நாட்களுக்குள் கடன் கடிதங்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், திறைச்சேரி செயலர், நிதியமைச்சர் ஆகியோரின் அனுமதி யைப் பெறுவது உள்ளிட்ட நிபந்தனைகள் உள் ளடங்குகிறது. (ஐ)

# ஆளுமைகளை நினைவு கூரல்!

யாழ்ப்பாணம், ஓக. 26

ஆளுமைகளை நினைவு கூருதல் என்ற தலைப்பில் தேசிய கலை இக்கியப் பேர வையின் ஏற்பாட்டில் ஓவியர் ஆசை இராசையாவின் இரண் டாவது ஆண்டு நினைவும் எழுத்தாளர் மாவை வரோதய னின் பன்னிரண்டாவது ஆண்டு நினைவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இல.62, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முரு கையன் கேட்போர்கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள் ளது.

சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் நினைவுரைகளை "இலங்கைக் காண்பியக் கலை வரலாற்றில் ஓவியர் ஆசை இராசையா” என்ற தலைப்பில் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் விரி வுரையாளர் திருமதி சுதர்சினி விக்னமோகன், ”மாவை வரோதயனின் மக்கள் நேயம்” என்ற தலைப்பில் பொதுவு டைமை அரசியல், சமூக செயல் பாட்டாளர் தோழர் சி.கா. செந்திவேல் ஆற்றவுள்ளனர்.

கலை, இலக்கிய, சமூக ஆர்வலர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துகளைப் பகிரு மாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத் துள்ளனர். (ஐ)

# புலம்பெயர் மக்களை விளித்து பூநகரி மக்கள் கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, ஓக. 26

புலம்பெயர்ந்த உறவுகள் இலங்கை மக்களை வறுமையி லிருந்து மீட்க வேண்டும் எனக் கோரி கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலகம் முன்பு நேற்று கவனவீர்ப்பு போராட் டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டது.



குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலகம் முன்பாக குறித்த கவனவீர்ப்பு போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

அக்கராயன் குளம், ஜெய புரம் பகுதிகளிலிருந்து மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



பதாகைகளில் “புலம் பெயர்ந்த உறவுகளே உங்கள் உறவுகளை வறுமையிலிருந்து மீட்டெடுங்கள், உங்கள் முத லீடு தேவையான காலம் இது, அரிசி பை வேண்டாம் பணத்தை முதலீடு செய்யுங் கள்”, போன்ற பதாகைகளை யும் ஏந்தியிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ஐ)

Eelanadu ஈழநாடு
26.08.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## சீனாவின் பிடி?

சீனாவின் கடன்களை மறுசீரமைக்குமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருக்கின்றார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டுக்கு சீனாவின் கடன் மறுசீரமைப்பு அவசியமான ஒன்றாகும். ஆனாலும் சீனா இதுவரையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சாதகமான அறிவிப்பை வெளியிடவில்லை. இவ்வாறானதொரு நிலையில்தான் ஜனாதிபதி மேற்படி கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். ஏன் கடன் மறுசீரமைப்பு கட்டாயமானது? சீனா கடன்களை மறுசீரமைக்க இணங்காது விட்டால் சர்வதேச நாணய நிதியம் கடன்களை வழங்குவதற்கு இணங்காது.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இலங்கைமீதான சீனாவின் பிடி கடுமையானது. அதுவரையில் இலங்கைக்கு கடனுதவி வழங்கும் நாடுகளில் ஜப்பானே முதன்மையானதாக இருந்தது. அந்த இடத்தை சீனா எடுத்துக் கொண்டது. இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய போதிலும், உடனடியாக சீனா பெரியளவில் உதவிகளை செய்வதற்கு முன்வரவில்லை. உடனடி அயல்நாடான இந்தியா மட்டுமே கடன் உதவிகளை செய்திருந்தது. சீனா உண்மையிலேயே இலங்கையை ஒரு நட்புநாடாகக் கொண்டிருந்தால் விரைந்து உதவியிருக்க வேண்டும். ஆனால், சீனா அவ்வாறு செய்யவில்லை.

ரணில் விக்கிரமசிங்க மிகவும் நெருக்கடியான நிலையில் நாட்டை பொறுப்பேற்றிருக்கின்றார். ரணில் வந்த முறைமை தொடர்பில் விமர்சனங்களை வெளியிடுபவர்களிடமும் மாற்று திட்டம் எதுவும் இல்லை. நாட்டைத் தொடர்ந்தும் அமைதியற்ற நிலையில் வைத்திருக்க முயற்சிப்பவர்களிடமும் மாற்றுத் திட்டம் எதுவுமில்லை. இந்த நிலையில் வெளிநாட்டு உதவிகள் போதியளவு கிடைக்காது விட்டால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. வெளிநாட்டு உதவிகளைத் தவிர, வேறு எந்தவொரு மாயஜால வித்தைகளும் ரணில் விக்கிரமசிங்கவிடம் கிடையாது. வெளிநாட்டு உதவி என்பதில் தலையாயதுதான் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி. ஆனால், சீனாவின் தொடர்ச்சியான அமைதி, அதிலும் தற்போது சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சீனாவின் பிடிக்குள்ளால்தான் மேற்குலகு – முக்கியமாக அமெரிக்கா நோக்குகின்றது. அமெரிக்க உளவுத்துறையின் தலைவர் அண்மையில் வெளிப்படுத்திய அபிப்பிராயம் சீன விவகாரமானது மேற்குலகால் எந்தளவு பாரதூரமாக நோக்கப்படுகின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாகும். இந்த நிலையில், சீனா கடன்களை மறுசீரமைப்பதற்கான இணக்கத்தை வெளியிடாமல் இருப்பதானது சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை மீட்க முடியுமா என்னும் கேள்வி எழுகின்றது.

மேற்குலகால் – முக்கியமாக அமெரிக்காவால் இதனை நிமிர்த்த முடியும். ஆனால், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முற்றிலுமான ஒரு மேற்கு சார்பான அரசாங்கமல்ல – ரணில் அவ்வாறான பின்னணியைக் கொண்டிருந்தாலும்கூட, ராஜபக்ஷக்களின் செல்வாக்குக் கணிசமாக இப்போதும் உண்டு. இந்த நிலையில், முழுமையான அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுவிட்டதாகவும் கூறிவிட முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மேற்குலகு இன்னும் தெளிவான நிலைப்பாடுகளை எடுக்கவில்லை.

இந்த நிலைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பெரும் நெருக்கடியாகவே இருக்கப் போகின்றது. சீனா கடன்களை மறுசீரமைப்பதைத் தொடர்ந்தும் இழுத்தடித்து வந்தால் கொழும்பால் என்ன செய்ய முடியுமென்னும் கேள்வியும் எழுகின்றது? ஆனால், சீனாவின் பிடி கடுமையாக இருக்கின்றது என்பது மட்டும் உண்மை. இந்தியா இது தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது என்பது அடுத்த கேள்வி. இலங்கைக்கு தொடர்ந்தும் உதவுவோம் என்னும் உறுதிமொழியை இந்தியா வழங்கியிருந்த போதிலும்கூட, அதற்கும் ஓர் எல்லையுண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை. அண்மையில் இடம்பெற்ற சீனக் கப்பல் விவகாரம் இந்தியாவுக்கு சில சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. சீனாவால் ஏற்பட்டுள்ள தடையை ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு தாண்டப் போகின்றார்?

# பயிர்களை அழிக்கும் விலங்குகள்; யானையை நீக்க நடவடிக்கை!

*கொழும்பு, ஓக. 26*

*பயிர்களை அழிக்கும் வனவிலங்கு பட்டியலில் இருந்து காட்டு யானையை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.*

*நாட்டில் வருடாந்தம் வன விலங்குகளால் பயிர்கள் 40சதவீதம் அழிக்கப்படுவதாக வன விலங்குகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*அதில், காட்டு யானையால் ஏற்பட்ட பயிர் சேதம் மிகக் குறைவு. அதாவது 20 வீதம் மட்டுமே அழிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, காட்டுப்பன்றிகள், குரங்குகள், மயில்கள் மற்றும் தேவாங்குகள் ஆகிய விலங்குகளால் சுமார் 46 சதவீதம் பயிர் சேதம் ஏற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பதிவான காட்டு யானைகள் மரணங்களின் எண்ணிக்கை 511 ஆகும். வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் தகவலின்படி, யானை - மனித மோதலால் 181 பேர் உயிரிழந்தனர்.*

*காட்டு யானைகளின் எண்ணிக்கை பெரிதாக அதிகரிக்காவிட்டாலும், நாட்டில் நிலவும் யானை மனித மோதலால் காட்டு யானைகளின் எண்ணிக்கை குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.*

*எனவே, காட்டு யானைகள் பாதுகாக்கப்பட வேண்டிய வன விலங்குகளின் பட்டியலில் தொடர்ந்து இருக்க அனுமதிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)*

# தடை செய்யப்பட்ட இஸ்லாமிய அமைப்புகளுடன் பேச தீர்மானம்!

*கொழும்பு, ஓக. 26*

*தடைசெய்யப்பட்ட 6 இஸ்லாமிய அமைப்புகளின் தலைவர்களுக்கும் பாதுகாப்பு உயர் அதிகரிகளுக்கும் இடையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பேச்சு இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.*

*ஜனாதிபதியின் பாதுகாப்பு விசேட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன், பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மற்றும் எச். எம்.எம் ஹாரிஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.*

*இதன்போது 6 இஸ்லாமிய அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தளர்த்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் குறிப்பிட்டார். (ஐ)*

# 5,636 கிலோ சிப்பிகளுடன் சந்தேகநபர் கைதானார்!

*புத்தளம், ஓக. 26*

*கற்பிட்டி தேத்தாவாடியில் அனுமதிப்பத்திரமில்லாமல் கடல் சிப்பிகளை மறைத்து வைத்திருந்த ஒருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கடல் சிப்பிகளை அனுமதிப்பத்திரமில்லாமல் கடல் சிப்பிகளை மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.*

*இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 5,636 கிலோ கடல்சிப்பிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயது கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த கடல் சிப்பிகளால் கோழிகளுக்கான உணவுகள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அலங்கார பொருட்கள் செய்வதற்கு பயன்படுத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.*

*சந்தேக நபருடன் கைப்பற்றப்பட்ட கடற்சிப்பிகள் கற்பிட்டி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக இதன்போது தெரிவித்தனர். (ஐ)*

# மருதடி ஆலயத்தில் கணபதி ஹோமம்!

*மானிப்பாய், ஓக. 26*

*விநாயகர் சதுர்த்தி தினமான எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை மருதடி விநாயகர் ஆலயத்தில் காலை 6.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை தொடர்ச்சியாக மஹா கணபதி ஹோமம் நடைபெறவுள்ளது.*

*தொடர்ந்து உற்சவமூர்த்தி விநாயகருக்கு திரவிய அபிஷேகம் இடம்பெற்று நவகலச கும்பாபிஷேகமும் நடைபெறும். இதைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.*

*மாலை 5 மணிக்கு பூசை ஆரம்பமாகி வசந்த மண்டப பூசையும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்று சுவாமி வீதி உலாவும் நடைபெறும். (ஐ-5)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 26 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 10
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அமாவாசை




**மேடம்**
உங்கள் எண்ணத்தை மற்றவர் புரிந்து கொள்ள முடியாமல் போகும். பிரச்னையை சந்திப்பீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் இழுபறி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்கள் விலகிச் செல்வார்கள்.

**இடபம்**
உங்கள் ஆலோசனைக்கு மதிப்பு ஏற்படும். சட்டரீதியான பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். செயல்களில் இருந்த நெருக்கடி விலகும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்**
செயல்களில் எதிர்பாராத சங்கடம் வரலாம். நிதானித்து செயல்பட்டால் நன்மை உண்டாகும். குடும்பத்தினர் தேவையை நிறைவேற்றுவீர்கள். செலவு அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவை.

**கடகம்**
மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயல்படுவீர்கள். செலவுகள் கட்டுப்படும். எதிர்பாராத வரவு உண்டாகும்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் தீட்டி அதை செயல்படுத்த முயற்சிப்பீர்கள். எதிர்பாராத செலவால் சங்கடப்படுவீர்கள். பணியிடத்தில் எதிர்பார்த்த நன்மையை காண முடியாமல் போகும்.

**கன்னி**
எண்ணம் நிறைவேறும். வீட்டைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பணவரவு உண்டாகும். விருப்பங்கள் இன்று நிறைவேறும். எதிர்பாராத வரவால் சங்கடங்கள் விலகும்.

**துலாம்**
தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வேலை தேடும் முயற்சியில் தீவிரம் காட்டுவீர்கள். குலதெய்வ அருளால் எண்ணம் நிறைவேறும்.

**விருச்சிகம்**
பழைய பிரச்னை இன்று முடிவிற்கு வரும். குடும்பத்தினர் ஒத்துழைப்பர். வெற்றி காண்பீர்கள். தடையைத் தாண்டி சாதிப்பீர்கள். மற்றவரால் முடியாததையும் முடித்துக் காட்டுவீர்கள்.

**தனுசு**
இன்று நிதானம் அவசியம். யோசித்து செயல்பட்டால் பெரிய சங்கடங்கள் ஏற்படாமல் போகும். உறவினரால் சங்கடத்தை சந்திப்பீர்கள். அலைச்சல் கூடும். எதிர்பார்த்ததை அடைய முடியாமல் போகும்.

**மகரம்**
வீட்டிற்காக நவீன பொருட்கள் வாங்குவீர்கள். குடும்பத்தினர் நலனில் கவனம் செல்லும். தம்பதிக்கிடையே இருந்த பிரச்னைகள் தீரும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவீர்கள்.

**கும்பம்**
உங்களுடைய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்ப்பு விலகும். உங்கள் நிலை உயரும். உறவுகளிடம் செல்வாக்கு அதிகரிக்கும். இதுவரை அலட்சியம் செய்தவர்கள் உங்களைப் பாராட்டுவார்கள்.

**மீனம்**
அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். நினைத்ததை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். பணியாளர்களுக்கு புதிய பொறுப்பு உண்டாகும். சிலர் உடல்நலக்குறைவுக்கு ஆளாக வாய்ப்புண்டு.

# அ. தி. மு. க. இயங்க முடியாத நிலை தனிநீதிபதியின் உத்தரவே காரணம்!

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஓக. 26

சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி உத்தரவால் தமிழகத்தின் முக்கிய எதிர்க்கட்சியான அ. தி. மு. க. செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதம் முன்வைக்கப் பட்டுள்ளது.

அ. தி. மு. க. பொதுக் குழு கூட்டம் செல்லாது என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வில் கடந்த வியாழக்கிழமை முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, அ. தி. மு. கவில் பொதுக்குழு முடிவே இறுதியானது. எனவே, அதை ஏற்பவர்களே அடிப்படை உறுப்பினர்களாக நீடிக்க முடியும் என்றும் எடப்பாடி பழனிசாமி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக தனிநீதிபதி தனது தீர்ப்பில் 11ஆம் திகதி நடந்த பொதுக் குழு கூட்டத் தீர்மானம் செல்லுபடியாகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அ. தி. மு. கவுக்கு எதிரான வழக்குகள் ஒரே பட்டியலில்!

சென்னை, ஓக. 26

அ. தி. மு. கவில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டதை எதிர்த்தும், உட்கட்சி தேர்தல் விவகாரம் என்று பலர் வழக்குகளை தொடுத்துள்ளனர்.

இந்த வழக்குகள் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது. இதன்போது, அ. தி. மு. க. கட்சி தொடர்பான அனைத்து வழக்குகளையும் ஒன்றாக பட்டியலிட்டு வழக்கை அடுத்த மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிபதி.

(ஐ)

# இலங்கை கடற்படை கைதுசெய்த மீனவர்களை விடுவிக்க வேண்டும்!

## வெளிவிவகார அமைச்சுக்கு முதல்வர் வலியுறுத்து



சென்னை, ஓக. 26

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களின் மீன்பிடிப் படகையும் உடனடியாக விடுவிக்கவும் மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்கள் இலங்கை நீதிமன்றத்தில் நேரில் முற்படுவதிலிருந்து விலக்கு அளிக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில்,

கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலிருந்து மீன்பிடிக்க சென்ற 10 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இது கடந்த ஜூன் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக நடைபெறும் ஐந்தாவது நிகழ்வாகும். இலங்கை கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை வெகுவாக பாதிக்கிறது.

தற்போது வரை தமிழகத்தைச் சேர்ந்த 94 மீன்பிடிப் படகுகள் இலங்கை வசம் உள்ளன. அவற்றின் உரிமையாளர்கள் இலங்கை நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாகி - அவர்களின் படகுக்கான உரிமையைக் கோர வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது இலங்கையில் நிலவும் சூழ்நிலையால் மீனவர்கள் இலங்கை நீதிமன்றத்தில் முற்படுவதிலிருந்து விலக்களிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# பாலியல் குற்றவாளிகளுக்கு பரிவு மோடி அரசுக்கு பாடம் புகட்டுவோம்!

## தமிழக காங்கிரஸ்

சென்னை, ஓக. 26

பாலியல் வன்கொடுமை குற்றத்தைச் செய்தவர்களுக்குப் பரிவு காட்டும் மோடி அரசுக்கு உரிய புகட்டுவோம் என்று கே. எஸ். அழகிரி கூறியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

குஜராத் கலவரம் நிகழ்ந்த போது 30 பேர் கொண்ட கும்பல் 21 வயது நிரம்பிய 5 மாத கர்ப்பவதியான பில்கிஸ் பானுவை பாலியல் வன் கொடுமை செய்ததோடு, அவரின் தாயார் மற்றும் 3 பெண்கள் உள்ளிட்ட 7 பேரை கொலை செய்தனர்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 11 பேருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. இந்த குற்றவாளிகளைத்தான் குஜராத் பா.ஜ.க. அரசு விடுதலை செய்திருக்கிறது.

பெண்களுக்கு எதிரான இத்தகைய பாலியல் வன் கொடுமை குற்றத்தைச் செய்தவர்களுக்குப் பரிவு காட்டும் மோடி அரசாங்கத்துக்கு உரிய பாடத்தைப் புகட்ட வேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை - என்றார்.

(ஐ)

# நெருக்கடியிலிருந்து மீண்டெழ இரண்டு வருடங்கள் செல்லும்!

## அடுத்த வருடம் மிகப் பெரும் சவாலாக அமையும் என்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஓக. 26

**“பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழ இரண்டு ஆண்டுகளாவது தேவை. அதிலும் எதிர்வரும் ஓராண்டு எமக்கு மிகப் பெரிய சவாலான ஆண்டாகும். இந்த நிலையில் நாட்டு மக்கள் அநாவசியச் செலவுகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவேண்டும்.”**

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

இலங்கை அரசால் 300 இற்கும் மேற்பட்ட பொருள்களுக்கு இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த 300 பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பசியையாவது போக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் நான் பிரதமர் பதவியை (மே மாதம்) பொறுப்பேற்றேன். அதன் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைமையைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி தெரிவில் நான் போட்டியிட்டேன். மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடியிருக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். எனினும், மிகவும் சவால்மிக்க காலகட்டத்தில்தான் இந்த அதி உயர் பதவியில் நான் இருக்கின்றேன்.

பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் நான் முதலில் தீர்வு கண்டே தீரு வேன். அதன் பின்னர் தேசிய ரீதியிலான ஒவ்வொரு பிரச்னை களுக்கும் அனைத்துக் கட்சிகளின் கலந்தாய்வுடன் தீர்வுக் கான எனது பயணம் தொடரும்-என்றார். (அ)

# பொலிஸ்ஃக்கு வாக்குமூலம் அளித்த இளைஞரின் வீட்டின் மீது தாக்குதல்!

## சுதுமலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 26

தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞனின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் புகுந்து அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் இளைஞன் ஒருவரை அழைத்து வாக்குமூலத்தை பதிவு செய்திருந்தனர்.

பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த இளைஞனின் வீட்டுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து, வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் அடித்து உடைத்துச் சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நுகர்வோர் அதிகார சபையால் மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, ஓக. 26

மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் நேற்று மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் விசேட சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.

அந்த வகையில் அரசாங்கத்தால் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெள்ளை முட்டை 43 ரூபாய், சிவப்பு முட்டை 45 ரூபாய் என அரசாங்கத்தினால் உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலையாக விதிக்கப்பட்டுள்ள நிலையில் அரச கட்டுப்பாட்டு விலைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முட்டைகள் விற்பனை செய்யபடவில்லை என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. இதன் அடிப்படையில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வழிகாட்டலில் நேற்று மட்டக்களப்பு நகரம், மட்டக்களப்பு சந்தை மற்றும் ஏறாவூர் பிரதேசம், ஏறாவூர் சந்தை ஆகிய இடங்களில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த வியாபாரிகள் எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மேலும் பல வியாபாரிகளுக்கு அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன. (அ)

# கையடக்கத் தொலைபேசி பற்றரி விலையும் உயர்வு!

கொழும்பு, ஓக. 26

அண்மையில் விதிக்கப்பட்ட இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் கையடக்கத் தொலைபேசி பற்றரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் கையடக்கத் தொலைபேசி பற்றரிகளின் விலையும் அதிகரிக்கும் என கையடக்க தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், தற்போது கையடக்கத் தொலைபேசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றின் விலைகளும் வேகமாக அதிகரித்துள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (அ)

# இலங்கையுடன் உறவை மேம்படுத்த எதிர்பார்ப்பு

## தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா


கொழும்பு, ஓக. 26

இலங்கையுடன் உறவுகளை மேலும் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தென்னாபிரிக்கா ஜனாதிபதி சிறில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதே தமது எதிர்பார்ப்பாகும்.

இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பையும் நட்புறவையும் பரஸ்பர புரிந்துணர்வையும் வலுப்படுத்துவதில் தென்னாபிரிக்கா தொடர்ந்தும் விசேட கவனம் செலுத்தும் எனவும் அந்த நாட்டு



ஜனாதிபதி சிறில் ரமபோசா குறிப்பிட்டார். (அ)

# மருந்துகளை இறக்குமதி செய்யும் செயல்முறை மாற்றியமைக்கப்படும்

## கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்

கொழும்பு, ஓக. 26

மருந்துகளை இறக்குமதி செய்யும் கொள்முதல் செயல் முறையை வினைத்திறனாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 9 முதல் 11 மாதங்கள் வரையிலான கொள்முதல் நடவடிக்கைகள் தற்போது 3 முதல் 4 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதிக வெளிப்படைத்தன்மையைப் பாதுகாப்பதன் மூலம் நோயாளிகளுக்கு தட்டுப்பாடு இன்றி



தொடர்ச்சியாக மருந்துகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும் என யுனிசெவ்வின் பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பின்போது அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு படிப்படியாக குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், எதிர்வரும் சில வாரங்களில் மேலும் குறைவடையும் எனவும் கூறினார்.

அத்துடன், பற்றாக்குறையாக உள்ள மருந்துகளை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அரசாங்கத்தின் மத்திய மருந்துக் களஞ்சியத்தில் கடந்த வாரம் முதல் 91 அத்தியாவசிய மருந்துகளின் கையிருப்பு தீர்ந்துவிட்டதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. எனினும் இது தொடர்பில் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார். (அ)

# குடும்பப் பெண் வெட்டி கொலை!

கொழும்பு, ஓக. 26

குடும்பப் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வெலிமடை - சாப்புகடே பகுதியில் குறித்த பெண் காணாமல்போனமை தொடர்பில் அவரது மகள் வெலிமடைப் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த பெண்ணின் சடலம் போர்வையால் சுற்றப்பட்டு அப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றில் வீசப் பட்ட நிலையில் மீட்கப்பட் டுள்ளது.

சடலத்தில் பாரிய வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

புரங்வெல பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வேறு ஒருவருடன் ஹோட்டல் நடத்தி வந்தார் எனவும், அந்த நபருடன் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக அந்த நபரே பெண்ணை வெட்டிக் கொலை செய்துள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் தலவாக்கலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான நபர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிமடைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# புதிய அமைச்சரவையில் கட்சிகளுக்கு உரிய இடம்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக். 26

**“புதிய அமைச்சரவை நியமனத்தின்போது ஒவ்வொரு கட்சிகளினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப உரிய இடம் வழங்கப்படும். இதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார்.”**

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அதிகளவு அமைச்சுப் பதவிகள் வழங்கவேண்டும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்திருந்த நிலையில், அது தொடர்பில் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோதே பிரதமர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ,அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தியிருந்தமை உண்மைதான். எனினும், இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் மொட்டு கட்சிக்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை.

அமைச்சுப் பதவிகள் தொடர்பில் மொட்டுக் கட்சியினர் ஏற்கனவே என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். எனவே, யார் யாருக்கு எந்த அமைச்சு வழங்குவது என்பது தொடர்பில் ஜனாதிபதியே இறுதி முடிவு எடுப்பார்” - என்றார்.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலேயே அதிகளவானோர் இருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# றெட்பாணா வள்ளுவர்புரத்தில் வாள்வெட்டுக் குழு தாக்குதல்!

## உழவியந்திரம், வீட்டுக்கு தீவைப்பு!!

முல்லைத்தீவு, ஓக. 26

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றெட்பாணா - வள்ளவர்புரம் பகுதியில் உள்ள வீடொன்றில் வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளதுடன் உழவியந்திரம், வீடு ஆகியவற்றையும் தீ வைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

றெட்பாணா வள்ளுவர்புரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தனித்திருந்த வேளையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மூவர் கொண்ட குழுவினரே தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# நுரைச்சோலை மின் பிறப்பாக்கி திங்கள்கிழமை முதல் இயங்கும்

கொழும்பு, ஓக. 26

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் திடீரென செயலிழந்த முதலாம் மின் பிறப்பாக்கியை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தேசிய மின் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ள முடியும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி, 300 மெகா வோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படும் என அதன் ஊடகப் பேச்சாளர் அன்றூ நவமணி தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாம் மின் பிறப்பாக்கி திடீரென செயலிழந்தது.

அத்துடன் இரண்டாம் மின்பிறப்பாக்கியின் தொழிற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், நாட்டில் தினசரி 3 மணிநேரம் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. (அ)

# அனுமதி பெறாத வணிகங்களுக்கு எரிபொருள் வழங்கப்படமாட்டாது

கொழும்பு, ஓக. 26

அனுமதி பெறாத மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்காத வணிகங்களுக்கு, இலங்கை பெற்றோலியக் கூட்டுப்பானம் எரிபொருள் வழங்காது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ருவிட்டரில் பதிவொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2,100 இற்கும் அதிகமான நிறுவனங்களிடம் அங்கீகாரமற்ற வகையில் எண்ணெய் தாங்கிகள் காணப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு கண்டறிந்துள்ளது.

இதேவேளை, தற்போது 1,250க்கும் மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# 30,000 சுற்றுலாப் பயணிகள் மூன்று வாரங்களில் வருகை

கொழும்பு, ஓக. 26

இந்த மாதத்தின் முதல் 3 வாரங்களில் மாத்திரம் சுமார் 30,000இற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில், 31,105 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் கடந்த ஜனவரி மாதம் முதல் திகதி முதல் இதுவரையில் 4 இலட்சத்து 89,775 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பண்டாரவன்னியனின் நினைவு வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு

வவுனியா, ஓக. 26

வன்னி இராட்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 219ஆவது நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது.

நினைவு தின நிகழ்வு வவுனியா நகரசபை மற்றும் பண்டாரவன்னியன் விழாக்குழுவின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

காலை 8.15 மணிக்கு வவுனியா மாவட்ட செயலக முன்றலில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு ஜனாதிபதி சட்டத்தரணியும் அவரது சிலை மாவட்ட செயலகத்தில் அமைவதற்கு காரணமாகவிருந்தவருமான மு.சிற்றம்பலம் சார்பாக மலர்மாலை அணிவித்ததுடன், நகரசபை உறுப்பினர்கள், பொது அமைப்பினர், அரச அதிகாரிகள்,

சமூக செயற்பாட்டாளர்களால் சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் தமிழ்மணி அகளங்கனால் நினைவுரை நிகழ்தப்பட்டது. அதனை தொடர்ந்து வவுனியா நகரசபை மண்டபத்தில் ஏனைய அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன. (அ)

# எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பரந்தப்பட்ட அரசியல் கூட்டணி!

## ரஞ்சித் மத்தும பண்டார அறிவிப்பு

கொழும்பு, ஓக. 26

பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பரந்தப்பட்ட அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்கப்படும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

“டலஸ் அணியினர் தனித்து விடப்படவில்லை. அவர்களுடன் எமக்கு புரிந்துணர்வு இருக்கின்றது. விரைவில் அவர்கள் எதிரணியில் அமர்வார்கள் என நம்புகின்றோம்.

அனைவரும் இணைந்து பாரிய கூட்டணியை வெகு விரைவில் உருவாக்குவோம். அந்தக் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸ செயற்படுவார்” - என்றும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபடாது என்றும், கட்சியின் முடிவை மீறி கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளைத் திசை திருப்பவே, போராட்டக்காரர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)










வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக் கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# யாழில் தொடர்ந்து வழிப்பறி; இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ்ப்பாணம் மாநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளை மற்றும் திருட்டுக்களில் ஈடுபட்ட இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் அரியாலையைச் சேர்ந்த 22,23 வயதுடைய இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை திருநெல்வேலிச் சந்தைக்கு பின்புறமாக பாடசாலை வீதியில் பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலியை அபகரித்து தப்பிய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் அண்மையில் யாழ். நகரில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களினால் திருடப்பட்ட இரண்டு சைக்கிள்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்களுக்கு பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# 30 இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானம்

## அமைச்சரவை நியமனத்துக்கு முன்னர்

கொழும்பு, ஓக். 26

**அடுத்த அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கு முன்னர் அரசு 30 இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவுள்ளது என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நியமனம் இடம்பெறவுள்ளது.

கடந்த அரசில் இராஜாங்க அமைச்சர்களாக பதவி வகித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள், புதிய அரசின் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அவர்களில் 40 பேரை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேட்டுள்ளது. எனினும், 30 பேரையே ஜனாதிபதி நியமிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் அடுத்த வாரம் அல்லது செப்ரெம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ரஷ்யா திறந்த மத்திய ஆசியா ஊடாக புதிய வணிக பாதை:

# ஐரோப்பிய பொருளாதார தடையின் எதிர்விளைவும் ரூபிள் பெறுமதி மேலும் வலுவாக அதிகரிப்பும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



உக்ரேனிய போரின் பின்னர் உலகில் எரிசக்தி விலைகள் மிகுதியாய் உயர்ந்து வருகின்றன, பணவீக்கம் உயர்ந்து வருகிறது, விநியோகச் சங்கிலிகள் குழம்பியும் உள்ளன. மற்றும் மில்லியன் கணக்கான மக்கள் எரிவாயு, தானியங்கள் மற்றும் உணவின்றி பட்டினியை நோக்கி செல்லும் அபாயத்தை அடைந்துள்ளனர்.

ஐரோப்பிய பொருளாதார தடையின் எதிர்விளைவாக, ரஷ்ய ரூபிள் பெறுமதி மேலும் வலுவாக அதிகரித்துள்ளது. இன்னும் சொல்லப் போனால், மேற்குலக தடைகள் ரஷ்யாவினது பொருளாதாரத்தையும், விளாடிமிர் புடினின் செல்வாக்கையும் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது என்றே கணிப்பிடலாம்.

### தனிமைப்படாத மாஸ்கோ பலவீனம் அடையவில்லை!

ரஷ்யா 2014இல் கிரிமியா மற்றும் டான்பாஸைக் கைப்பற்றியதில் இருந்து மாஸ்கோ மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளுக்கு புட்டின் பலத்த பதிலடியை கொடுத்து வருகிறார். அத்துடன் புட்டினின் மத்திய ஆசியா ஊடான புதிய இந்தியா, சீனா போக்குவரத்து பாதை திறப்பும் ரஷ்யாவை மேலும் வலுப்பெறச் செய்துள்ளது.

பொருளாதார தடைகளால் கிழக்கு ஐரோப்பிய பிராந்தியங்களில் ரஷ்யாவின் போக்கை மாற்றி மேலும் ஆக்கிரமிப் பைத் தடுப்பதே மேற்குலகின் பிரதான நோக்கமாக இருந்தது. ஆனால் இத்தடைகள் பின்விளைவுகளை சந்தித்தது, மேற்குலகின் இராஜதந்திர தோல்வி மிகவும் வெளிப்படையானதாகவே தெரிகிறது.




ரஷ்யாவிற்கு எதிரான மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் சமீபத்திய நிலவரப்படி, மிகவும் தவறான மற்றும் எதிர்மறையான கொள்கையாகவே கருதப்பட வேண்டி உள்ளது என பொருளியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேற்குலகின் உக்ரேனுக்கான இராணுவ உதவியும், பொருளாதார, ஆயுத - ஆளணி வழங்கலும் மாஸ்கோவில் உள்ள ஆட்சிக்கு எதிராக இருப்பினும், தற்போது அவை பயனற்றதாகவும் திட்டமிடப்படாத இலக்காகவே எண்ண வேண்டி உள்ளது.

இத் தடைகளே உலகின் மூன்றாந்தர நாடுகளில் பொருளாதர பேரழிவை ஏற்படுத்துகிறதா என ஐயப்பட வேண்டியும் உள்ளது.

அத்துடன் ரஷ்ய மக்களும் புட்டினினை தீவிரமாகவே ஆதரிக்கத் தொடங்கி உள்ளனர் என உள்ளூர் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

### வலுவான நாணயமாக ரஷ்ய ரூபிள்

உக்ரேனிய போரின் பின்னர் ரஷ்ய ரூபிள் இந்த ஆண்டு உலகின் வலுவான நாணயங்களில் ஒன்றாக மாறியுள்ளது. ஜனவரி முதல் கிட்டத்தட்ட 50 வீதம் உயர் வலுவடைந்துள்ளது. மாஸ்கோவின் வெளிநாட்டு சொத்துக்கள் மேற்குலகால் முடக்கப்பட்டாலும், புடின் அதைப்பற்றி பெரிதாக கவலைப்பட்டதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

நேட்டோ நாடுகளின் அரசியல் வாதிகள் உக்ரேனுக்கு இராணுவ உதவியை அதிகரிப்பது மட்டுமே புத்திசாலித்தனமாக கருதிக் கொள்கின்றனர். எவ்வித எச்சரிக்கையுமின்றி வர்த்தகத் தடைகளால் மூன்றாம் உலக நாடுகளே பாதிப்படைவதனை மேற்குலகு கண்டும் காணாமலேயே உள்ளது.

அது மாத்திரமின்றி மேற்கத்திய நாடுகள் தாங்கள் விரும்பியபடி உலகை ஒழுங்குபடுத்தும் உரிமையுடையவை என்ற நவ-ஏகாதிபத்திய அனுமானத்தின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன.

பூகோளமயமாக்கப்பட்ட பொருளாதார நலன்களை மேற்கத்தேய நாடுகளே தம்வசப்படுத்தி உள்ளனர்.

சோவியத் வீழ்ச்சியின் பின்னர் கியூபாவிலிருந்து வடகொரியா வரை, சீனா முதல் ஈரான் வரை, வெனிசுலா முதல் ரஷ்யா வரை, மேற்கத்தேய ஆட்சிகள் பொருளாதார ரீதியில் வேருன்ற முயன்றன. ஆனால் புட்டினின் வருகையுடன் இந்நிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### மேற்கத்திய பொருளாதாரத் தடைகள்

ரஷ்ய மீதான மேற்கத்திய பொருளாதாரத் தடைகளை உருவாக்கிய ஐரோப்பிய பாதுகாப்பு ஆய்வாளர்கள், இந்த விஷயத்தில் தற்போது மௌனமாய் உள்ளனர் போல. மேற்குலக வியூக சிந்தனையாளர்கள் அமைதியாக கண்மூடி இருக்கிறார்கள் போலவே தென்படுகிறது.

அத்துடன் பிரிட்டனின் எதிர்கால தலைவர்களான லிஸ் ட்ரஸ் மற்றும் ரிஷி சுனக் ஆகியோர் போர்க்குணமிக்க சொல்லாட்சிகளில் மட்டுமே போட்டியிடுகின்றனர். தோல்வியுற்ற போரிஷ் ஜோன்சனை போல எந்த நோக்கமும் இல்லாமல் ரஷ்யாவிற்கு எதிராக கடுமையான சொற்களையே பிரயோகிக்கின்றனர்.

### விலை உயர்ந்த மசகு எண்ணெய்

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளின் உண்மையான விளைவு என்னவென்றால், அவை பதிலடியாக மேற்குலகையே அதிகம் பாதித்துள்ளது. எதிர்வரும் குளிர்காலத்தில் ஐரோப்பாவை உறைய வைக்க புடின் மீதான தடைகளே மேற்கு ஐரோப்பாவை தளம்பச் செய்யும் போல உள்ளது.

ஐரோப்பாவிற்கான எரிவாயு விநியோக பெரிய குழாய்களில் இருந்து விநியோகத்தை 80 வீதம் வரை ரஷ்ய குறைத்துள்ளது. அத்துடன உலகில் மசகு எண்ணெய் விலைகள் மிகவும் உயர்ந்துள்ளன.

கிழக்கு ஐரோப்பாவின் கோதுமை மற்றும் பிற உணவுப் பொருட்கள் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவிற்கு செல்வது அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் கருங்கடல் கடற் போக்குவரத்தும் ரஷ்யாவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இதேவேளை பிரிட்டனின் உள்நாட்டு எரிவாயு கட்டணம் ஒரு வருடத்தில் மட்டும் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. ஆசியாவிற்கான எரிசக்தி ஏற்றுமதிகள் உயர்ந்து, அதன் செலுத்தும் நிலுவையை முன்னெப்போதும் இல்லாத சுமையை கொண்டு சென்றுள்ளது.

### ஐரோப்பிய தலைமை மாற்றங்கள்:

இதற்கிடையில், மேற்குலகின் தலைமை பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி மற்றும் அமெரிக்கா நினைத்தது போல ரஷ்யத் தலைமை ஆட்டம் காணவில்லை. மாறாக மேலும் வலுப்பெற்று உள்ளது.

தற்போதைய நிலவரப்படி, எரிவாயு பற்றாக்குறையால் வாடும் ஜெர்மனியும் ஹங்கேரியும் புடினின் இசைக்கு நடனமாட நெருங்கிவிட்டன. ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வருகின்றமையே இதற்கு காரணமாகும்.

மேற்குலக தடைகளால் ரஷ்யா தோல்வியை நோக்கிச் செல்லும் என்றும், உக்ரேனிய போரில் பின்வாங்குவதே சாத்தியம் என மேற்கு நாடுகள் எண்ணியிருந்தனர். ஆனால் எதிர்மாறாக ரஷ்யா பொருளாதார பலம் பெற்று போர்க் களத்தில் நிதானமாகவே முன்னேறி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

விரைவில் பனிக்காலத்தை எதிர்நோக்கும் ஐரோப்பாவில் போரின் தாக்கமும் - விளைவுகளும் அதிகமாகவே இருக்கும். அதீத பனிக்காலத்திலேயே இரண்டாம் உலகப் போரில் ஸ்ராலின் கிராட்டில் நாசிப்படைகளை வெற்றி கொண்ட ரஷ்யப்படைகள் எதிர்வரும் பனிக்காலத்தை போரில் எப்படியான திருப்புமுனைகளை சந்திப்பார்கள் என்பதை காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

### மெக்டொனால்ட் - ரஷ்யாவில் புது வடிவம்


உக்ரேனிய போர்க்களத்தில் மெதுவாக முன்னேறிய படி இருக்கும் ரஷ்யா அதேபோல மெதுவாக ஆபிரிக்க, ஆசிய நாடுகளின் ராஜாங்க, வர்த்தக உறவுச் சூழ்நிலைகளையும் சரிசெய்து வருகிறது என்பதை காணக் கூடியதாக உள்ளது.

உண்மையில் இத்தடைகளின் பின்னரே சீனா, ஈரான் மற்றும் இந்தியாவுடனான வர்த்தகத்தை ரஷ்யா மேலும் மேம்படுத்தி உள்ளதை காணலாம்.

ரஷ்யா நாடு முழுவதும் உள்ள மெக்டொனால்ட் உணவகங்கள் Vkusno & tochka ("சுவையானதும் - அவ்வளவுதான்") எனப்படும் ரஷ்ய உணவுச் சங்கிலி நிறுவனங்களாக மாற்றப்பட்டுள்ளன. நிச்சயமாக ரஷ்ய பொருளாதாரம் பலவீனமாக ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் புட்டின் அரசு ஆசியா முழுவதும் ஒரு புதிய பொருளாதார சாம்ராஜ்யத்தை ஒருங்கிணைக்கும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னேற்றி வருகின்றது. அதேவேளையில், புட்டின் வலுவான நிலையில் சீனாவுடன் எப்போதும் இல்லாத மேம்பட்ட உறவைப் பேணி வருகிறார்.

# அமிர்தலிங்கம் என்ற அரசியல் சொத்து!

**அமரரின் 95ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**



**மாலி**

இலங்கையில் வாழ்கின்ற இரண்டு தேசிய இனங்களுமே ஒரே நதிமூலத்தையே கொண்டிருந்தாலும் அதாவது, இலங்கையின் ஆதி குடிகளான இயக்கர், நாகர், வேடர் என்ற இவர்களைத் தவிர்ந்த, சிங்களவர், தமிழர் என்ற இரு இனத்தவருமே இந்தியாவிலிருந்தே குடியேறியிருந்தபோதிலும், இலங்கையின் சரித்திரம் சிங்கள மக்களின் சரித்திரமாகவே எழுதப்பட்டது. மகாவம்சம்தான் இலங்கையின் 'பைபிள்'போலானது. சோல்பரி அரசியலமைப்பில் பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த வேளையில்தான் இலங்கையில் எழுதப்படாதுபோன இலங்கைத் தமிழர்களின் சரித்திரம்பற்றிய ஒரு விழிப்பு எழத் தொடங்கியது. அத்தோடு, தங்களுடைய வாழ்வுக் காலத்தில் தமிழ் இனத்தின் மொழி, பிரதேசம், சமூகம், கலாசாரம். கல்வி, பொருளாதாரம் சார்ந்த ஓர் அரசியல் விழிப்புணர்வும் அப்போதுதான் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டத் ஏற்படுத்தப்பட்டது. அது, தங்களின் உரிமைக்கான ஒரு விடுதலைப் போராட்டமாகவும் வரலாற்றில் ஒரு வடிவத்தை எழுதத் தொடங்கியது.

தங்களுடைய அரசியல் உரிமைகளுக்காக சாத்வீக வழியிலான சமஷ்டி கோரிக்கையுடன் ஆரம்பித்த இந்த விடுதலைப் போராட்டம், ஈற்றில் தங்களுக்கென்று ஒரு தனிநாடு கோரிக்கையுடன் ஆயுத போராட்டமாக மாறி, உலக அரங்கிலும் அறியப்பட்டது. ஆக, சுதந்திரத்துக்குப் பின்னரான இந்த விடுதலைப் பேராட்ட வரலாற்றுக் காலத்தில், இலங்கைத் தமிழ் இனத்துக்கு எக் காலத்துக்குமான ஓர் அரசியல் சொத்தாக தன்னை அளித்தவர் அமிர்தலிங்கம்.

என்னுடைய பத்திரிகை வாழ்வு - பத்திரிகை அனுபவம் ஐம்பது ஆண்டுகளை அண்மித்துவிட்டது. இந்த வாழ்வில், அமிர்தலிங்கம் என்ற இந்த மனிதரை நான் தெரிந்துகொண்டதை மேலானதாக சொல்வேன். அவரைத் தெரிந்துகொண்டமை என்று சொல்வது, அவருடனான பழக்கத்தை நான் சொல்லவில்லை. அவரி டம் பொதிந்திருந்த எத்தனையோ வகையான உன்னத மான ஆற்றல்களையும் பண்புகளையும் அவற்றின் தனித்துவத்தையும் நான் உன்னிப்பாக தெரிந்துகொண்டேன்.

இலங்கைத் தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன்தான் தொடங்குகிறது. இதை, அமிர்தலிங்கத்துடன் தொடங்கியது என்றும் சொல்லாம். முப்பது வருடங்கள் சாத்வீகவழியில் தீரங்களையும் தியாகங்களையும் நிறைத்த இப் போராட்டம், பின்னர் தீவிரவாத போக்கில் ஆயுத போராட்டமாக மாற்றம்பெற்றது. எஸ். ஜே. வி. செல்வநாயகமோ அல்லது ஜீ. ஜீ. பொன்னம்பலமோ சந்தித்திருக்காத மிகச் சிக்கலான ஒரு மாறுதல் காலத்து தலைவராக அமிர்தலிங்கம் விளங்கினார். அதுவும், முன்னரெப்போதும் இல்லாதவிதத்தில் அக்காலத்தில் பராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந்தார். அத்துடன், நாட்டைப் பிரிக்கும் தனிநாடு கோரிக்கையுடன் அவர் அப்போது பாராளுமன்றம் சென்றிருந்தார்.

இப்படி, ஓர் அசுர நெருக்குதலில் மார்தட்டி, சாதுரியத்துடன் நிமிர்ந்து நின்ற ஒரு பெரும் தலைவர் அமிர்தலிங்கம். தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதனையொத்த இயக்கங்ளையும் தடைசெய்வதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்ட எதிரியைப் போல, அத்தனை சட்டவாதிகளினதும் சரமாரியான கணைகளை எதிர்த்து, தன்னையும் அவர்களையும் (புலிகளையும்) காட்டிக்கொடாது, கத்திமேல் நடந்த தான அந்த பேச்சு, அந்த நிலைமாறுகால தலைவனை புடமிட்டு காண்பித்தது. இப்போதும் சொல்வேன், அமிர்தலிங்கத்தின் இந்த உரையைத் தெரிந்த எவராலும், அவருக்கு எதிராக துப்பாக்கி நீட்ட முடியாது.

துணிச்சலும், தீரமும், ஆளுமைகளும் மிக்க அரசியல்வாதியான அமிர்தலிங்கம், இலங்கையின் ஓர் உன்னத அரசியல் கனவானாக பரிணாமமானதை இக் காலப்பகுதியில் ஒரு பாராளுமன்ற நிருபராக அருகிருந்து நான் அவதானித்தேன் கண்டேன். அவரைநான் தெரிந்துகொண்டதாக சொல்வது இதைத்தான். பொதுவாக, எல்லா பாராளுமன்ற நிருபர்களுமே இதனைத் தங்களில் உணர்ந்தார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ் மக்களின் அரசியலுக்கு அவர் பயன்படுத்தும் சாதுரியத்தில் அரசாங்கம் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொணர்ந்தது. ஆனால், இலங்கையின் மிகச் சிறந்த எதிர்க் கட்சிகட்சித் தலைவர் ஒருவராகவே அனைத்து கட்சிகளும், பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த பிக்குகள் உள்பட்ட பெரும்பாலான சிங்கள மக்களும் அவரை மதித்தார்கள். உலக அரசியலில் சரித்திரமாகும் சிறிமாவோ பண்டாரநாயக்க, தன்னுடைய குடியுரிமையையும் இழந்து, அந்த பாராளுமன்ற சபையைவிட்டு வெளியேறுகையில் சொன்ன கடைசி வார்த்தை, 'கௌரவ எதிர்க்கட்சித் தலைவரையும் கௌரவ நல்லூர் உறுப்பினரையும் (மு. சிவசிதம்பரம்) என் உயிருள்ளவரை மறக்கமாட்டேன்', அவர் வார்த்தைகளால் மாத்திரம் இதைச் சொல்லவில்லை, அவர் கண்களில் அப்போது கண்ணீர் சொட்டியது.

ஐந்து நிமிஷமோ அல்லது ஐந்து மணித்தியாலங்களோ, தமிழோ அல்லது ஆங்கிலமோ, சந்தர்ப்பத்துக்கும் சபைக்கும் ஏற்ப பேசவல்ல மகா சமர்த்தர் அமிர்தலிங்கம். இலங்கையின் அரசியலமைப்பு 1978இல் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாற்றப்பட்டபோது, அந்த சட்டமூலம் மீதான விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றவில்லை. ஆனால், ஏன் தாங்கள் அதில் பங்குபற்றவில்லை என்பதை விளக்கி, அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் ஐந்து மணித்தியாலங்கள் உரையாற்றினார். அது, அப்போது அந்த பாராளுமன்றத்தில் பேசப்பட்ட மிக நீண்ட உரையாகவிருத்தது.
அமிர்தலிங்கத்தையடுத்து பிரேமதாச பேசினார். அவர்

## மந்திர உரை செய்த மாயம்

ஐந்தரை மணித்தியாலங்கள் பேசினார். அமிர்தலிங்கத்தின் பேச்சு சாதனையாகிவிடக்கூடாது என்பதற்காகவே பேசினார்.

ஆனால், அமிர்தலிங்கம் பேசி அமர்ந்தபோது, அப்போது சபாநாயகராகவிருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அக்கிராசனத்தில் இருந்தபடி, குறிப்பொன்றை பாராளுமன்ற செயலாளர்மூலம் அர்தலிங்கத்திடம் சேர்ப்பித்தார். அதனைப் படித்த அமிர்தலிங்கம், சபாநாயகரைப் பார்த்து தலையை அசைத்து, ஒரு புன்முறுவல் செய்தார்.

'இப்படி ஓர் அருமைவாய்ந்த உரைக்கு தலைமை தாங்க கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்' என்று சபாநாயகரின் அந்தக் குறிப்பு இருந்தது.

1977 பொதுத் தேர்தலில் இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்கவினுடைய ஆட்சி மாறி, ஜே. ஆர். ஜயவர்த்தன புதிய ஆட்சியை அமைத்தார். அதுபோலவே இந்தியாவில் இந்திரா காந்தியினுடைய ஆட்சி மாறி, மொரார்ஜி தேசாய் பிரதமரானார். இந்த ஆட்சி மாற்றத்தில் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் மொரார்ஜி தேசாயும் புதிய நண்பர்களானார்கள். இலங்கையில் தமிழர் அரசியல் நடவடிக்கைகளில் இளைஞர்களின் தீவிரவாதமும் தீவிரமாகிக்கொண்டிருந் தது. அரசுக்கு தலையிடியாகும் இந்த விவகாரத்தைத் தணிக்கும் ஒரு முயற்சியாக, பிரதமர் ஜயவர்த்தனவின் அழைப்பில் மொரார்ஜி தேசாய் இலங்கை வந்தார். அவ்வேளையில் அவருடன் பேச அமிர்தலிங்கத்தின் அலுவலகம் பலவாறாக முயன்றும் முடியவில்லை. எனினும், பாராளுமன்றத்தில் மொரார்ஜி தேசாய்க்கான வரவேற்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் அமிர்தலிங்கத்துக்கு ஐந்து நிமிடங்கள் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

பேச்சு முடிந்த பின்னர், மொரார்ஜி தேசாய் தரப்பிலிருந்து வந்த அழைப்பில், அமிர்தலிங்கம் சில சுற்றுக்கள் மோரார்ஜி தேசாயுடன் பேசினார். டெல்லி திரும்புமுன்னர், 'இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் பிரச்னை, அவர்களுக்கு கௌரவமான விதத்தில் தீர்க்கப்படவேண்டும்' என்று, பத்திரிகையாளர்களிடம் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டார். விமான நிலைய வழியனுப்பு வைபவத்தில், இந்தியா வர அமிர்தலிங்கத்துக்கு ஒரு விசேட அழைப்பையும் மொரார்ஜி தேசாய் விடுத்தார்.

பாராளுமன்ற வரவேற்பில், அந்த ஐந்து நிமிட மந்திர உரையின் மாயம் இது.

இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தீர்வில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் தேவையையும் சரியாக அதன் பரிமாணங்களோடு உணர்ந்தவர் அமிர்தலிங்கம். அதில் இந்திய தலைவர்களுடன் அவர் பேணிய உறவு ஒருபுறமிருக்க, இந்திய தலைவர்கள் இவரிடம் காண்பித்த மதிப்பும் அபிமானமும் கருத்தில் கொள்ள வேண்டியது. அதிலும், இந்திரா காந்தி ஓர் அரசியல் கனவானாகவே அவரை மதித்தார். அந்த மதிப்பில் அமிர்தலிங்கத்துக்கு இந்தியாவிலும் உலக நாடுகளிலும் அவசியமான ஆதரவுக்கு இந்திரா காந்தி பெரிதும் அநுசரணையாகவிருந்தார்.

டெல்லி ராஷ்டிரபதி பவனில், சுதந்திரதின இரவு விருந்துக்கு (1983) அமிர்தலிங்கத்தை அழைத்த பிரதமர் இந்திரா காந்தி, அவரை சில நிமிடங்கள் தாமதித்து வரச்சொன்னார். விருந்தினர்களுடன் நிறைந்திருந்த மண்டபத்தில் அமிர்தலிங்கம் பிரவேசித்தபோது, இந்திரா காந்தி எழுந்துவந்து அவரை வரவேற்றார். எல்லோர் கவனமும் அமிர்தலிங்கம்மீது திரும்பியது.

தேர்தலில் தோல்வியுற்ற கருணாநிதி, 1981 மதுரை ஐந்தாவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டை புறக்கணித்தார். கருணாநிதிக்கு ஆதரவானவர் என்ற எண்ணத்திலோ என்னவோ, மாநாட்டு தொடக்கநாளில் சம்பந்தமேயில்லாமல், அமிர்தலிங்கம்மீது சற்று காட்டமாகவே முதலமைச்சர் எம். ஜி. ஆர். பேசியமை, ஆறு தினங்களும் மாநாட்டு நிகழ்வுகளுடன் இணைந்த ஒரு பேசுபொருளாகவே தமிழ்நாடு முழுவதும் இருந்தது. ஏழாம் நாள் இறுதிநாள் நிகழ்வுகளில் பிரதமர் இந்திரா காந்தி கலந்துகொண்டார்.

அன்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்ட இந்திரா காந்தி, மேடைகளில் அருகிலிருந்த எம். ஜி. ஆர். பக்கம் திரும்பவில்லை. மாலை, குதிரைப்பத்தய திடலில் பிரமாண்டமான முடிவு வைபவம். அங்கும் மேடையில் அருகருகேதான் இருந்தார்கள். அமிர்தலிங்கம் அங்கு வரவும் இந்திரா காண்பித்த வாஞ்சையில் திகைத்துப்போன எம். ஜி. ஆர்., அமிர்தலிங்கத்தை ஆரத் தழுவினார்.

ஆக, இப்படி இந்தியாவுடன் - இந்திராவுடன் பேணிய - ஏற்படுத்திய நம்பிக்கையுடனான நட்பில் அமிர்தலிங்கம் ஈட்டிய சொத்து ஒன்றுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம். இதனை இலங்கைத் தமிழ் மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வாக எவருமே கொள்ளவில்லை - சொல்லவில்லை. ஆனால் அதே வேளை, இது மிக எளிதாக ஏற்பட்டுவிட்ட ஒன்றும் அல்ல. தெற்கு ஆசியாவின் கிழநரியான ஜே. ஆர்., 'இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னர், நான் தொடர்ந்து பதவியிலிருக்க எனக்கு பாதுகாப்பாக இருப்பீர்களா' என்று இந்தியாவைக் கேட்டுத்தான் ஒப்பமிட்டார்.

ஒப்பந்தத்தைப்பற்றிய வாத பிரதிவாதங்களுக்குள் இப்போது செல்லவில்லை. ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினம் அமிர்தலிங்கத்திடம் லண்டனிலிருந்து தொலைபேசியில் இந்திய அமைதிப்படை பற்றி கேட்டபோது. எந்த ஒரு நாட்டின் இராணுவமும் எக்காரணத்துக்காகவும் இன்னொரு நாட்டுக்குள் செல்வது பெரிதும் வரவேற்புக்குரியதல்ல. ஆனால், எங்களுடைய நிலைமையில் இந்திய இராணுவம் உடனடியாக வராவிட்டால், இங்கு பெரும் 'மசக்கர்' நடந்துவிடும் என்று சொன்னார்.

அமிர்தலிங்கத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் சில இரகசிய முன்னெடுப்புகள் நடைபெறுவதாகத்தான் அமிர்தலிங்கம் கொலைசெய்யப்பட்டார். அப்படியொரு முன்னெடுப்பு நிகழ்ந்திருந்தால், அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைவிட கூடுதலானதாக இருந்திருக்குமா அல்லது குறைந்ததாக இருந்திருக்குமா?

எப்படியிருந்தாலும், அது இப்போது முடிந்த கதை. அமிர்தலிங்கத்தின் வாழ்வும் அந்தக் கதையோடு முடிந்தது. ஆனால், அமிர்தலிங்கம் ஈழத் தமிழர்களின் அரசியல் சொத்து. அது, மறைக்கப்பட்ட ஒரு சொத்தாக இருப்பதுதான் நம்முடைய இனத்தின் அவலம்.



முப்பது ஆண்டுகள் சாத்வீக போராட்டமும் முப்பது ஆண்டுகள் ஆயுத போராட்டமுமாக இலங்கையில் தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் ஓய்ந்தபோது, மற்றொரு பத்தாண்டுகளை அதற்குப் பின்னர் தமிழர் அரசியலில் தலைப்பட்ட அரசியல்வாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர். நம்மிடமிருந்த - இருக்கின்ற சொத்துக்களை இவர்கள் தெரிந்திருக்கிறார்களோ என்னவோ ஆனால், நம்முடைய மக்களுக்கு ஓரளவுக்கு பயனாகவல்லதாக நம்மிடம் இப்போது இருப்பது அமிர்தலிங்கம் தேடிவைத்த இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான். அதனை நம்முடைய மக்களுக்கு பயனாக்குவதுதான் இந்த அரசியல் வாதிகள் இப்போது அவசியமாக செய்யவேண்டியதும் செய்யக்கூடியது மாகும். ●

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

### கல்வி tv CHANNEL-1

26.08.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

26.08.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நாட்டுக்காக போராடியவர்களை கைது செய்வதை ஏற்கமுடியாது!

அம்பாறை, ஒக. 26

தேசத்தின் மீது அக்கறை கொண்டு அறவழி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மீது பயங்கரவாத தடை சட்டத்தை பிரயோகிக்க வேண்டாம். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவதற்கான செயற்பாடுகளை ஜனநாயகத்தை விரும்பும் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஜனநாயகத்தை மீறும் இவ்வாறான செயற்பாடுகளை கண்டிப்பதாக ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 30 வருட யுத்தத்தின் காரணமாக அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலரும், ஈஸ்டர் தாக்குதலிலும் சம்பந்தப்படாத இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், பலரும் இப்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளுமின்றி சந்தேகத்தின் பேரில் அநியாயமாக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

தற்போது, நாட்டை நாசமாக்கி ஒருவேளை சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலைக்கு மக்களை ஆளாக்கிய ஆட்சியாளருக்கு எதிராக போராடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல், பயங்கரவாதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டதை விடவும் அரசியல் உள்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகம் என்பது பரவலான கருத்தாக அமைந்துள்ளது. ஜனநாயக போக்கு நிறைந்தவராக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், கனவான் அரசியல் செய்து சர்வதேச மட்டத்தில் நல்ல மரியாதையை பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு போராடிய அறவழிப் போராட்டக்காரர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எண்ணி மிகவும் வேதனையடைகின்றோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ஜனநாயக ரீதியில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பிரயோகிக்கித்தால் தற்பொழுது நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான பொருளாதார நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை அச்சத்தோடு நினைவுகூற விரும்புகின்றோம். நாட்டின் எதிர்காலத்தை மனதில் கொண்டு சரியான முடிவை எடுக்க ஜனாதிபதியும், அரசாங்கமும் முன்வரவேண்டும் - என்றுள்ளது. (அ)



# அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்னைகளுக்கு உடன் தீர்வு

அம்பாறை, ஒக. 26

அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்னைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் பொதுமக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இருந்து வருகை தந்த பொதுமக்கள் தங்களின் பிரச்னைகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் முன்வைத்திருந்தனர்.

இதன்போது, சில பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்ட அதேவேளை, ஏனைய பிரச்னைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கி அது தொடர்பிலான நடவடிக்கையை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செயலாளருக்கு பணிப்புரை வழங்கினார். (அ)

# தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து ஆறு அமைப்புக்களை நீக்குவது குறித்து நடவடிக்கை

அம்பாறை, ஒக. 26

தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து ஆறு அமைப்புக்களை நீக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கு இணங்க நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்ற முதல் வாரத்தில் தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடைகளை நீக்குவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், இசாக் ரஹ்மான் ஆகியோர் ஜனாதிபதிக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி விடுத்திருந்த பணிப்புரைக்கு இணங்க ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்ட கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்த இந்தக் கூட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ள 11 முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து 06 அமைப்புக்களின் தடையை நீக்குவது தொடர்பில் பல்வேறு விடயங்களை கலந்துரையாடி அதற்கான மேலதிக நடவடிக்கைகளை பாதுகாப்பு துறையினர் மேற்கொண்டுள்ளதுடன் தடையை நீக்கவுள்ள ஆறு அமைப்புக்களின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்து பேச நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் துரித கதியில் தடை நீக்க அறிவிப்பை வெளியிட பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலும் கூறி னார். (அ)

# சமுர்த்தி வீடமைப்புக்கான அடிக்கல் நடும் வைபவம்

திருமலை, ஒக. 26

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள சமுர்த்தி திணைக்களம் ஊடாக புதிய வீட்டு நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, குறித்த வீட்டுத் திட்ட நிர்மாணிப்புக்கான அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம். சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புல்லா, திட்ட உதவியாளர் எம்.ஏ.எம்.நஜீப் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மீரா நகர், சிராஜ் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலா ஆறு இலட்சம் ரூபாய் செலவில் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

சமுர்த்தி விசேட வீட்டுத் திட்டத்தின் கீழ், உரிய பயனாளிகளுக்கு இவ்வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.



# தென்கிழக்கு பல்கலையில் 2ஆவது சர்வதேச ஆய்வரங்கு

அம்பாறை, ஒக. 26

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் "தொழில்நுட்ப மாற்றத்தின் மூலம் நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்" எனும் தொனிப்பொருளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கு தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நிகழ்வின் இணைப்பாளர் ஆர்.கே.ஏ.ஆர். காரியப்பரின் வழிகாட்டலில் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டு உரையாற்றினார். குறித்த 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கின் பிரதான உரையை தென்கிழக்குப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியருமான எம்.எம்.எம். நாஜீம் நிகழ்த்தினார். அத்துடன் நிகழ்வில் விருந்தினருக்கான உரையை கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கே.பீ.ஹேவா கமகே நிகழ்த்தினார்.

இணையத்தினூடாகவும் நேரலையாகவும் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், உயிர் முறைமைப் பிரிவின் தலைவர் கலாநிதி முனீப்.எம். முஸ்தபா, தகவல் தொழிநுட்ப பிரிவின் தலைவர் கே.முகம்மட் றிப்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வரங்கில் 38 ஆய்வுக் கட்டுரைகள் முன்னிலைப் படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாய அமைச்சர் அமரவீரவுடன் மட்டக்களப்பு விவசாயிகள் சந்திப்பு



மட்டக்களப்பு, ஒக. 26

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தினர் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் கலந்துரையாடப்பட்டதாக விவசாய சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் முந்தி பயிர்ச்செய்கை பண்ணும் மாவட்டமாக இருப்பதால் அதற்கு ஏற்ற வகையில் டீசலை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும், விவசாயிகளுக்கு இலவசமாக டீசலை வழங்குவதற்கான திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் இதன்போது விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்ததாக கலந்துகொண்ட விவசாய பிரதிநிதிகள் தெரிவித்தனர். (அ)



# பதிலடி பயங்கரமானது!

## சுதந்திர தினத்தில் ரஷ்யாவுக்கு உக்ரைன் கடும் எச்சரிக்கை

கீவ், ஓக. 26

தனது நாட்டில் சுதந்திர தினத்தை முன்னிட்டு ரஷ்யா தங்கள் மீது இன்று தாக்குதல் நடத்தினால், அதற்கான பதிலடி மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கும் என்று உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி எச்சரிக்கை விடுத்துளார்.

உக்ரைனில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள போலந்து அதிபர் அண்ட்ரேஸ் டூடாவுடன் இணைந்து தலைநகர் கீவில் செய்தியாளர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்த ஜெலென்ஸ்கி, இது குறித்து கூறியதாவது:

ரஷ்யப் படையெடுப்பு நடந்து 6 மாதங்கள் நிறைவடைகிறது. அதே நாளில் சோவியத் யூனியலிருந்து பிரிந்ததை சுதந்திர தினமாக உக்ரைன் கொண்டாடுகிறது. அந்த நாளில், உக்ரைனின் அரசுக் கட்டடங்கள் உள்ளிட்ட முக்கிய நிலைகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தச் சூழலில், அத்தகைய தாக்குதல்களுக்கு சக்தி வாய்ந்த பதிலடி கொடுக்கப்படும் - என்றார்.(அ)

# உக்ரைன் சுதந்திர தினத்தன்று ரஷ்யா கொடூரமான தாக்குதல்!

## 22 பொதுமக்கள் உயிரிழப்பு!!



கீவ், ஓக. 26

கடும் போருக்கு மத்தியில் உக்ரைன் 31 -ஆவது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் சுதந்திர தினத்தன்று ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் பயணிகள் ரயில் ஒன்று தீப்பற்றி எரிந்து அதில் பயணித்த 22 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து உக்ரைன் சுதந்திரம் பெற்றதன் 31ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வுகளின்போது வெறுக்கத்தக்க ஆத்திரமூட்டல்களில் ரஷ்யா ஈடுபடலாம் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி எச்சரித்திருந்த நிலையில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தாக்குதல் அச்சம் காரணமாக பொது சுதந்திர தின கொண்டாட்டங்களையும் உக்ரைன் அரசு இரத்துச் செய்திருந்தது.

இந்நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீடியோ உரையில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள டொனெட்ஸ்கிற்கு மேற்கே 145 கி.மீ. தொலைவில் உள்ள சிறிய நகரமான சாப்லைனில் ஒரு ரயில் ரொக்கட் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறினார். இதில் 22 பேர் கொல்லப்பட்டனர். இவ்வாறான அட்டூழியங்களுக்கு ரஷ்யா பொறுப்புக் கூறியே ஆக வேண்டும் எனவும் ஜெலென்ஸ்கி தெரிவிவித்தார்.

பயணிகள் ரயிலை இலக்கு வைத்து ரஷ்யப் படைகள் அடுத்தடுத்து இரண்டு ஏவுகணைகளை வீசித் தாக்கியதாகவும், இதனால் ரயில் தீப்பற்றி எரிந்ததாகவும் உக்ரேனிய அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு உடனடியாக பதிலளிக்கவில்லை. ரஷ்யப் படைகளால் பொதுமக் கள் இலக்கு வைக்கப்படுவ தில்லை எனவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, 22 பொதுமக்கள் கொல்லப்பட்ட தாக்குதலை அமெரிக்கா கண்டித்துள்ளது. உக்ரைனில் பொதுமக்கள் நிரம்பியிருந்த ரயில் மீத ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியமையானது பெரும் அட்டூழியமாகும். இவ்வாறான குற்றங்களுக்கு ரஷ்யாவை பொறுப்புக் கூறச் செய்யும் நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுப்போம் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அண்டனி பிளிங்கன் கூறினார். (அ)

# உக்ரைனில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் வாக்கெடுப்பு

## திட்டமிடுகின்றது ரஷ்ய அரசு



மொஸ்கோ, ஓக. 26

கைப்பற்றிய உக்ரேனியப் பிரதேசத்தில் ரஷ்யா தனது ஆட்சியை முறையாக நிறுவும் நோக்கில் வாக்கெடுப்பை நடத்தவுள்ளதாக வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பியின் கூற்றுப்படி, கெர்சன், டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க், சபோரிஜியா மற்றும் கார்கிவ் ஆகிய இடங்களில் “உக்ரைனில் வாக்கெடுப்பை நடத்தத் தயாராகுமாறு ரஷ்ய தலைமை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது” என்று அமெரிக்கா அறிந்துள்ளது என்றார்.

“இந்த வாக்கெடுப்பு சில நாட்கள் அல்லது வாரங்களில் தொடங்கலாம். உண்மையில், இந்த வார இறுதிக்குள் முதல் அல்லது ஒன்றின் ரஷ்ய அறி விப்பை நாங்கள் பார்க்கலாம்,” என்று அவர் மேலும் கூறினார்.

“உக்ரைனுக்குள் புவியியல் ஆதாயங்களை அடைவதில் அவர்கள் வெளிப்படையாக சிக்கலை எதிர்கொள்வதால், அவர்கள் தவறான அரசியல் வழிமுறைகள் மூலம் அதைப் பெற முயற்சிக்கின்றனர்,” என்று அவர் கூறினார்.

அத்தகைய பிராந்தியங்களில் உக்ரைனியர்களிடையே ரஷ்ய இணைப்புக்கு சிறிய ஆதரவு இருப்பதாக கிர்பி தெரிவித்தார்.

“இந்த வாக்கெடுப்பின் முடிவுகளை ரஷ்யா கையாள முயற்சிக்கும், உக்ரைனிய மக்கள் ரஷ்யாவுடன் சேர விரும்பு கிறார்கள் என்று பொய்யாகக் கூறுவதற்கு நாங்கள் எதிர் பார்க்கிறோம்,” என்று அவர் கூறினார்.

“இந்த தவறான தகவலை நிகழ்நேரத்தில் அழைப்பதும் எதிர்கொள்வதும் முக்கியமான தாக இருக்கும்,” என்று அவர் கூறினார்.

2014 ஆம் ஆண்டில், உக்ரை னின் கிரிமியன் தீபகற்பத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிய சில வாரங்களுக்குப் பிறகு, ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் முடிவில், அந்த மக்கள் ரஷ்யாவுடன் சேர விரும்புவ தாகக் கூறப்பட்டது.

அமெரிக்க உளவுத்துறை யின் படி, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள ரஷ்ய அதிகாரிகள் உள்ளூர் மக்கள் வாக்களிக்க வரமாட்டார்கள் என்று கவலைப்படுகிறார்கள் என கிர்பி கூறினார்.

அதைச் சமாளிக்கும் வகையில் வெற்றியைக் காட்ட ரஷ்யர்கள் “பணியாற்றல்களை” தயார் செய்து வருவதாக கிர்பி மேலும் விவரங்களுக்குச் செல்லாமல் கூறினார்.

“ரஷ்ய அதிகாரிகளுக்கே தெரியும், அவர்கள் செய்வது சட்டபூர்வமான தன்மையைக் கொண்டிருக்காது, அது மக்க ளின் விருப்பத்தை பிரதிபலிக்காது,” என்று அவர் கூறினார்.

“உக்ரைனின் இறை யாண்மை பிரதேசத்தை கட்டுப் படுத்தும் எந்தவொரு முயற்சியும் சட்டபூர்வமானதாக கருதப்படாது என்பதில் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் மிகவும் தெளிவாக உள்ளன,” என்று அவர் கூறினார். (அ)

# அல்பேனியாவுடன் பிரிட்டன் ஒப்பந்தம்

லண்டன், ஓக. 26

சிறிய படகுகளில் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து சட்டவிரோதமாக நாட்டிற்குள் நுழையும் ஏராளமான அல்பேனியர்களை விரைவாக திருப்பி அனுப்ப ஏதுவாக அல்பேனியாவுடன் இணைந்து செயற்படுவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

நாட்டுக்குள் நுழையும் அகதிகளை ருவாண்டாவுக்கு நாடுகடத்துவதற்கான ஒப்பந்தம் ஏற்கனவே உள்ள நிலையில் அதற்கு மேலதிகமாக அல்பேனியாவுடன் இணைந்து செயற்படுவதாக பிரிட்டன் கூறியுள்ளது.

சிறிய படகுகளில் பிரித்தானியாவுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை கடந்த திங்கட்கிழமை ஒரே நாளில் சாதனை அளவுக்கு அதிகரித்ததை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இவ்வாண்டு ஜூன் முதல் ஜூலை வரையிலான ஆறு வார காலப்பகுதியில் பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக வந்தவர்களில் கிட்டத்தட்ட 40 வீதம் பேர் அல்பேனியாவைச் சேர்ந்தவர்கள் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான அல்பேனியர்கள் இரக்கமற்ற கடத்தல்காரர்களால் ஆபத்தான மிகச் சிறிய படகுகள் மூலம் பிரிட்டனுக்குள் அனுப்பப்படுகின்றனர். இந்நிலையில் இவ்வாறு சட்டவிரோதமாக வரும் எவரும் பிரிட்டனுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற செய்தியை தெளிவாகச் சொல்ல வேண்டியுள்ளது. பிரிட்டனுக்குள் வரும் அல்பேனியர்களை நாடுகடத்தும் நடவடிக்கை அடுத்த வாரத்தில் இருந்து துரிதப்படுத்தப்படும் என என்று பிரிட்டன் உள்த்துறை அமைச்சர் பிரிதி பட்டேல் கூறினார்.

அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் எங்களுடன் ஒத்துழைப்பதற்காக அல்பேனியாவுக்கு நன்றி கூறுகிறோம். இங்கிலாந்தில் இருக்க எந்த உரிமையும் இல்லாத அல்பேனியர்களை அகற்றுவதை விரைவுபடுத்துவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்துவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழையும் புலம்பெயர்ந்தோரை ருவாண்டாவிற்கு நாடு கடத்தும் ஒப்பந்தத்தை பதவியில் இருந்து வெளியேறும் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மேற்கொண்டிருந்தார்.

எனினும் செப்ரெம்பரில் இந்த நடவடிக்கை சட்ட சவாலுக்கு உட்பட்டது. இதையடுத்து ருவாண்டாவுக்கு நாடு கடத்தும் திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சட்டவிரோமாக பிரிட்டனுக்குள் வருவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இவ்வாறு பிரிட்டனுக்குள் வந்தவர்களில் எண்ணிக்கை கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகும்.

இச்வாறான நிலையில் ஜோன்சனுக்குப் பதிலாக பிரதமர் பதவிக்கு போட்டியிடும் இரண்டு முக்கிய வேட்பாளர்களான லிஸ் ட்ரஸ் மற்றும் ரிஷி சுனக் ஆகியோர் ருவாண்டா நாடு கடத்தல் கொள்கையை அமுல்படுத்துவதில் உறுதியாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போர்முலா-1 கார் பந்தயம் இனி ரஷ்யாவில் நடக்காது

மொஸ்கோ, ஓக. 26

ரஷ்யாவில் இனி போர்முலா-1 கார் பந்தயம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷியாவின் சாச்சி நகரில் இந்த ஆண்டு போர்முலா-1 கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயம் நடைபெற இருந்த நிலையில் உக்ரைன் போர் காரணமாக, அப்போட்டியை ரஷ்ய அரசு இரத்து செய்தது.



இதனால், உடனடியாக வேறு நாட்டுக்கு பந்தியத்தை மாற்றும் சூழல் ஏற்பட்டதால், இனி வரும் காலங்களில் போர்முலா-1 கார் பந்தயங்கள் ரஷ்யாவில் நடைபெறாது என போர்முலா-1 அமைப்பின் தலைமைச் செயலர் ஸ்டெபனோ டாமினிகலி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தாண்டு ரஷ்யாவில் நடைபெற இருந்த சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி உக்ரைன் போர் காரணமாக சென்னையில் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அமெரிக்க ஓப்பன் ரெனிஸ் விலகினார் ஏஞ்சலிக் கெர்பர்!



பெர்லின், ஒக. 26

ரெனிஸ் உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையும் 3 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றவருமான ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் அமெரிக்க ஓப்பனிலிருந்து விலகியுள்ளார்.

இது குறித்து அவர் பதவிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

"அமெரிக்க ஓப்பன் ரெனிஸ் போட்டியில் விளையாட வேண்டும் என்று உண்மையிலேயே விரும்பினேன். ஆனால், இறுதியாக இருவருக்கு (கர்ப்பத்தை சுட்டிக் காட்டி) எதிராக ஒருவர் ஆடுவது நியாயமான போட்டியாக இருக்காது என்பதால் விலக முடிவு எடுத்தேன். அடுத்த மாதத்தில் இருந்து ஒரு ரெனிஸ் வீராங்கனையாக உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்வதில் இருந்து ஓய்வு எடுக்க இருக்கிறேன். ஆனால், இது மிகச் சிறந்த காரணத்துக்காக என்று நம்புகிறேன். நான் உங்கள் எல்லோரையும் தவற விடுகிறேன்.

நியூயோர்க், எனது ரெனிஸ் வாழ்க்கையில் அடிக்கடி திருப்பு முனையாக இருந்திருக்கிறது. இதனால் இந்த வருடமும் வித்தியாசமாக இருக்காது என்று உணர்கிறேன். இங்கு 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்றதுடன் தரவரிசையில் முதலிடத்தையும் பிடித்தேன். இதனால் நியூயோர்க் குக்கு எனது மனதில் எப்போதும் சிறப்பு வாய்ந்த இடம் உண்டு. புதிய அத்தியாயத்தை நோக்கி பயணிக்கிறேன். அதே நேரத்தில் உற்சாகமாகவும், பரவசமாகவும் இருக்கிறேன். தொடர்ந்து நீங்கள் அளிக்கும் ஆதரவுக்கு நன்றி" என்று கூறியுள்ளார்.



# டெஸ்ட் தரவரிசை ரபாடா முன்னேற்றம்!

டுபாய், ஒக. 26

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்களை வீழ்த்திய தென்னா பிரிக்காவின் ரபாடா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி இனிங்ஸ் வெற்றி பெற்றது.

இந்த போட்டிக்கு பின்னர் டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதன்படி, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்களும், 2ஆவது இன்ங்ஸில் 2 விக்கெட்களும் வீழ்த்திய தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் ரபாடா 2 இடங்கள் முன்னேறி 3ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் பட் கம்மின்ஸ் முதல் இடத்திலும், ரவிச்சந்திரன் அஷ்வின் 2ஆவது இடத்திலும், ரபாடா 3ஆவது இடத்திலும், ஷாகின் அப்ரிடி, பும்ரா 4 மற்றும் 5ஆவது இடங்களிலும் உள்ளனர். (ஐ)

# சொந்த மண்ணில் 100 டெஸ்ட் அண்டர்சன் புதிய சாதனை!

லண்டன், ஒக. 26

சொந்த மண்ணில் 100 டெஸ்ட்களை விளையாடும் முதல் வீரர் என்கிற புதிய சாதனையை படைத்துள்ளார் இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் அண்டர்சன்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட், மன்செஸ்டரில் நேற்று ஆரம்பமானது

இந்த டெஸ்டில் விளையாடும் 40 வயது இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன், சொந்த மண்ணில் 100 டெஸ்ட்களை விளையாடும் முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இது அவர் விளையாடும் 174ஆவது டெஸ்ட் போட்டியாகும்.

சொந்த மண்ணில் அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர்களின் பட்டியல் வருமாறு,

அண்டர்சன் - 100 டெஸ்ட், சச்சின் - 94 டெஸ்ட், பொண்டிங் - 92 டெஸ்ட், பிரோட் - 91 டெஸ்ட். (ஐ)





# திறமையின்றி இந்த தூரத்தை நான் எட்டியிருக்கவே முடியாது!

## விமர்சகர்களுக்கு கோலி பதில்

புதுடில்லி, ஒக. 26

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி சர்வதேச அரங்கில் சதம் அடித்து ஏறக்குறைய 3 வருடங்களாகின்றன. இதனால் அவர் மீதான விமர்சனங்கள் அதிகரித்தன. இதைத் தொடர்ந்து சமீபத்திய தொடர்களில் விராட் கோலிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டிருந்தது. இதனால், புத்துணர்ச்சியுடன் வரும் 27ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தொடங்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் கலந்துகொள்ள உள்ளார்.

இந்நிலையில் விராட் கோலி கூறியதாவது:

எனது ஆட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிவேன், சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளை எதிர்கொள்ளும் திறமை மற்றும் பல்வேறு வகையான பந்து வீச்சுகளை எதிர்கொள்ளும் திறமை இல்லாமல் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் கடந்து வந்திருக்க முடியாது. இந்த காலக்கட்டத்தை கடந்து செல்வதற்கான செயல்முறை எளிதானதே.

2014இல் இங்கிலாந்தில் நடந்தது வேறு மாதிரியானது ஸ்டெம்புகளுக்கு வெளியே வீசப்பட்ட பந்துகளில் ஒரே மாதிரி ஆட்டமிழந்தது. அதிலிருந்து வெளியேவர நான் வேலை செய்ய வேண்டி இருந்தது. ஆனால், இப்போது எனது துடுப்பாட்டத்தில் பிரச்னை உள்ளது (சமீபகாலமாக ஆட்டமிழக்கும் விதங்கள்) என்று சுட்டிக்காட்ட எதுவும் இல்லை.

என்னைப் பொறுத்தவரை, துடுப்பாட்ட வழிமுறைகளை செயல்படுத்துவது உண்மையில் எளிதான விஷயம், ஏனென்றால் நான் நன்றாக துடுப்பாட்டம் செய்கிறேன் என்று எனக்குத் தெரியும். ரிதத்தை மீண்டும் உணரத் தொடங்கும் போது, துடுப்பாட்டம் சிறப்பானதாக அமைந்துவிடும் என்பதை அறிவேன். எனவே இது ஒரு பிரச்னையே இல்லை.

துடுப்பாட்டத்தில் ஏற்ற, இறக்கங்கள் உள்ளதை அறிவேன். இந்த கட்டத்தில் இருந்து வெளியேவந்ததும், நான் எவ்வளவு சீராக துடுப்பாட்டம் செய்ய முடியும் என்பதை அறிவேன். எனது அனுபவங்கள் எனக்கு புனிதமானவை. இதில் இருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன். ஒரு விளையாட்டு வீரராகவும், ஒரு மனிதனாகவும் என்னிடம் உள்ள முக்கிய மதிப்புகள் என்ன என்பதை புரிந்து கொள்ள விரும்புகிறேன் - என்றார்.

# பாபர், கோலி சந்திப்பு!



டுபாய், ஒக. 26

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலை வர் பாபர் அஸாமை சந்தித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி.

இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்த போது கைகளை குலுக்கி 'ஹலோ' சொல்லி விட்டு, சில நொடிகள் பேசியுள்ளனர்.

ஆசிய கிண்ணத் தொடர் எமிரேட்ஸில் நாளை தொடங்கி செப்ரெம்பர் 11 வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் இந்திய அணி ரோஹித் சர்மா தலைமையில் களம் காண் கிறது. தொடரில் பங்கேற்கும் விதமாக அனைத்து அணிகளும் எமிரேட்ஸில் உள்ளன.

இந்த தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நாளை மறுதினம் விளையாடுகின்றன. இரு அணிகளுக்கும் இதுதான் முதல் போட்டி. அதனால் இந்த போட்டி ரசிகர் கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் மற்றும் இந்திய வீரர் விராட் கோலி சந்தித்த காணொலியை இந்திய கிரிக்கெட் சபை பகிர்ந்துள்ளது.

இருவரும் சர்வதேச கிரிக்கெட்டில் அனைத்து வடிவங்களிலும் ஓட்டங்களை குவித்து வருகின்றனர். பாபர் 10,472 ஓட்டங்களும் கோலி 23,726 ஓட்டங்களும் எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## புலம்பெயர் மன்னார் உறவுகளால் தாய்மாருக்கு போசாக்குப் பொதி

மன்னார், ஓக. 26

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து தேவை அதிகரித்துள்ள நிலையில் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த மன்னார் நலன்புரிச் சங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் தாய்மார்களுக்கான சத்துணவு வழங்கும் நிகழ்வு மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரோய் பீரிஸ் மற்றும் நானாட்டான் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மன்னார், நானாட்டான் பகுதிகளை சேர்ந்த தாய்மார்களுக்கு தேவையான உப உணவுப் பொருட்களை உள்ளடக்கிய ஊட்டச்சத்து உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜ் வினோதன், மன்னார் நலன்புரிச் சங்கம் லண்டன் அமைப்பின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன் மற்றும் அதன் மாவட்ட உறுப்பினர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

மன்னார் நலன்புரிச் சங்கத்தினரால் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக போசாக்கு வழங்கும் உணவு திட்டத்திற்கான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்வைத்த காலை பின்வைக்கமாட்டோம்

## டலஸ் அழகப்பெரும சூளுரை



கொழும்பு, ஓக. 26

**“தனியானதொரு அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளோம். இது விடயத்தில் முன் வைத்த காலை ஒருபோதும் பின்வைக்கமாட்டோம்.”**

-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து தனியாக சென்றுள்ள டலஸ் அழகப்பெரும எம்.பி. தெரிவித்தார்.

“அதிகாரத்தில் இருப்பவர்கள் அழிந்துபோவதற்கு நான்கு பிரதான காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. ஒன்று தனி நபர் அதிகாரங்களை குவித்துக்கொள்ளுதல், அடுத்தது அதிகாரத்தை குடும்பமொன்று தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தல், மூன்றாவது திட்டமில்லாமல் அதிகாரத்தை பொறுப்பேற்றல், நான்காவது காரணி ஊழல், மோசடியாகும். ஆட்சிக்கு வந்தது முதல் அரசியலில் இருந்து விரட்டப்படும்வரை சிலர் ஊழல், மோசடிகளில் ஈடுபடுகின்றனர். இந்நிலைமை மாற வேண் டும். அதனை மாற்றியமைக் கவே நாம் தனியான பய ணத்தை ஆரம்பித்துள்ளோம்.” - என்றும் டலஸ் குறிப்பிட்டார். (அ)

## முத்துராஜவலை முனையத்தில் இருந்து எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 26

முத்துராஜவலை முனையத்தில் இருந்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான டீசல், பெற்றோல் விநியோகம் தற்போது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சாலைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. உரிய அறிவிப்பு இன்மையால் தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அதேநேரம், கொலன்னாவை முனையத்தில் இருந்தும் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் கூறினார். (அ)

## தனியார் பஸ் சேவை மீண்டும் பாதிப்பு?

கொழும்பு, ஓக. 26

நாளை முதல் தனியார் பஸ் சேவைகள் 50 வீதம் குறைவடையும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களாக இ.போ.ச டிப்போக்களில் இருந்து முறையாக டீசல் வரவில்லை என்றும், நேற்று பஸ்கள் முழுமையாக இயங்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தென் மாகாணத்தில் பல பஸ்கள் இயங்க முடியாத நிலையில் இருப்பதாகவும், அரசாங்கத்திடம் இருந்து விரைவான பதிலை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (அ)

## முடிவின்றி நீளும் முட்டைச் சிக்கல்!

கொழும்பு, ஓக. 26

வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள முட்டை விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சில உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும், அங்கு அவர்கள் வெவ்வேறு விலைகளை முன்மொழிந்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விலைகள் பரிந்துரைக் கப்பட்டபோதிலும், வர்த்தமானி அறிவித்தல் மூலம் முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், அவர்கள் பரிந்துரைத்த விலையில் முட்டைகளை வழங்க முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முட்டை உற்பத்தியாளர் சங்கம், ஒரு முட்டையை அதிகபட்ச சில்லறை விலையாக 50 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ சந்தர்ப்பம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளது. (அ)

## மொட்டு எம்.பிகளின் வீடுகள் சேதம் மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 26

கடந்த மே மாதம் 9ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கிரிந்திவெல பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ணவின் வீடு மற்றும் சொத்துக்களை சேதப்படுத்தி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 27 மற்றும் 35 வயதுடையவர்கள் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், ஹொரணையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்கவின் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் ஹொரணையில் வசிக்கும் 39 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ரோஹித்த அபேகுணவர்தன ஆகியோரின் வீடுகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 17 மற்றும் 25 வயதுகளையுடைய ரத்மலானை பகுதிகளைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## மே 09 எரிக்கப்பட்ட 50 பஸ்களுக்கு நீதி கோரி ஐ . நாவில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 26

மே 09 நாடு முழுவதும் வன்முறை வெடித்த போது எரிக்கப்பட்ட பஸ்களுக்கான காப்பீட்டுத் தொகையோ இழப்பீடுகளோ கிடைக்கவில்லை என்று இலங்கையின் தனியார் பஸ் உரிமையாளர்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறையிட்டுள்ளனர்.

இந்த வன்முறையின்போது 50 பஸ்கள் வரை எரியூட்டப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டபோதும் நியாயம் கிடைக்கவில்லை.

இதனையடுத்தே சர்வதேசத்திடம் முறையிடவேண்டிய நிலை ஏற்பட்டது என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன நேற்று தெரிவித்தார்.

இதன்படி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிலும், ஐரோப்பிய ஒன்றியத்திடமும் நீதி கேட்டு முறைப்படி முறைப்பாடு செய்துள்ளதாக விஜேரத்ன கூறினார். (அ)

## நல்லூரில் பக்தர் போல பாசாங்கு செய்து திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூரில் பக்தர் போல பாசாங்கு செய்து ஏனைய பக்தர்களிடம் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை பொலிசார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவம் இடம்பெற்றுவரும் நிலையில், ஆலயத்துக்குள் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்த குறித்த நபர் ஆலயத்துக்குள் கடமையிலிருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பக்தர்களிடம் நூதனமாக திருடிய வங்கி அட்டையைப் பயன்படுத்தி ஆலயத்துக்கு அருகில் உள்ள புடைவை விற்பனை நிலையத்தில் ஆடைகளை கொள்வனவு செய்தபோதே குறித்த நபர் இனங் காணப்பட்டார்.

இதனையடுத்து துரிதமாக செயற்பட்ட பொலிஸார் கண்காணிப்பு கமராவின் உதவியுடன் குறித்த நபரை கைது செய்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு-கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப ஒத்துழைப்பு தேவை

## ஜப்பான் அரசிடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஓக. 26

யாழ்.மாவட்டம் அடங்கலான வடக்கு கிழக்கினை சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு, பொருத்தமான நவீன தொழில்நுட்ப ரீதியான தொழில் முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு ஜப்பான் அரசாங்கத்திடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

நிலைபேறான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கக் கூடிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை விருத்திக்கான பொருளாதார ஒத்துழைப்புக்களையும் தொழில்நுட்ப ரீதியான அனுபவங்களையும் ஜப்பான் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் கூறினார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுக்கோஷி ஹிடேகி உள்ளிட்ட குழுவினர் நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே, கடற்றொழில் அமைச்சரினால் குறித்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இலங்கையின் குறிப்பாக, பாரம்பரிய கடற்றொழில் முறைமைகளைப் பயன்படுத்தி வருகின்ற யாழ். மாவட்டம் அடங்கலான வடக்கு-கிழக்கினை சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு, பொருத்தமான நவீன தொழில்நுட்ப ரீதியான தொழில் முறைமைகளை நீண்ட கால நட்பு நாடாக விளங்குகின்ற ஜப்பான், கடந்த காலங்களில் யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கை தரத்தினை கட்டியெழுப்புவதில் காண்பித்த அக்கறையை நன்றியுடன் நினைவுபடுத்தினார்.

அதேபோன்று எதிர்காலத்தில், கடற்றொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் வகையில் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கான ஒத்துழைப்புக்களை எதிர் பார்ப்பதாகவும் தெரிவித்தார். அறிமுகப்படுத்துவதற்கான ஒத்துழைப் புக்களை வழங்குமாறு கோரியிருந்தார்.

அதேபோன்று நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஏற்படுத்தித் தரக்கூடிய கடலட்டை, இறால் மற்றும் கடல்பாசி போன்றவற்றின் உற்பத்திகளை பரந்தளவில் விஸ்தரிப்பதற்கும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு போன்றவற்றை விருத்தி செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகள் தொடர்பாக ஜப்பான் தூதுவருக்கு தெளிவுபடுத்தி கடற்றொழில் அமைச்சர், அவற்றுக்கான தொழில்நுட்ப மற்றும் பொருளாதா ரீதியான ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும், குறிப்பாக கடலட்டைக் குஞ்சுகளை விரைவாக உற்பத்தி செய்யக்கூடிய வழிவகைகளை அவசரமாக எதிர் பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், கடலுணவுகளை பாதுகாக்கக்கூடிய களஞ்சிய வசதிகளைக் கொண்ட முச்சக்கர வண்டிகள் கிடைக்குமாயின், தரமான கடலுணவுகள் மக்களை இலகுவாக சென்றடைவதை உறுதிப்படுத்த முடியும் என்று சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், கடலுணவுகள் சார்ந்த பெறுமதிசேர் உற்பத்திகளை கிராமிய ரீதியில் மேற்கொள்ளவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படுமானால் பொருளாதார ரீதியில் மேலதிக நன்மைகளை உருவாக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை கேட்டறிந்த ஜப்பானிய தூதுக்குழுவினர், இலங்கைக்கான மனிதாபிமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஜப்பான் தயாராக இருப்பதாகவும், கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலிப்பதாகவும் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்கா உட்பட்ட அமைச்சு அதிகாரிகளும் கடற்றொழில் அமைச்சரின் ஆலோசகர்களான எஸ். தவராசா மற்றும் பேராசிரியர் நவரட்ணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்திய சுவிற்சர்லாந்து

கொழும்பு, ஓக. 26

அவசரகால சட்டம் நீடிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள நிலையில், இலங்கைமீது விதித்திருந்த கடும் பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு சுவிற்சர்லாந்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுவிஸ் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை இலங்கை உள்நாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கம் வரவேற்றுள்ளது.

"சுவிற்சர்லாந்து எமக்கு ஒரு முக்கியமான சந்தையாகும். குறிப்பாக குளிர்காலத்தில் சுவிஸ்டர்லாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையை சிறந்த சுற்றுலா தலமாக உள்ளது." - என இலங்கை உள்நாட்டு சுற்றுலா சங்கத்தின் தலைவர் நிஷாத் விஜேதுங்க தெரிவித்தார்.

பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதால், சுவிஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிரித்து, இலங்கையின் சுற்றுலாத் துறை மேம்படும் என்றும் விஜேதுங்க சுட்டிக்காட்டினார்.

சுவிற்சர்லாந்து அரசாங்கம், இலங்கையின் அண்மைக்கால முன்னேற்றங்களைக் கருத்திற் கொண்டு, இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நிலைமைகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு தனது குடிமக்களுக்கு பயண ஆலோசனை வழங்கியிருந்தது.

அத்துடன், இலங்கை விவகாரத்தில் சமூக வலைத்தளங்கள் உட்பட அரசியல் கலந்துரையாடல்களைத் தவிர்க்குமாறும், உள்ளூராட்சி மன்றங்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் தமது குடிமக்களுக்கு சுவிஸர்லாந்து அரசாங்கம் அறிவுறுத்திருந்தது.

இலங்கைக்கான பயணத்திற்கு முன்னரும், பயணத்தின் இடைநடுவிலும் சமகால சூழ்நிலை, ஊரடங்குச் சட்டங்கள் குறித்து ஊடகங்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மூலம் ஆராயுமாறும் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிக விலைக்கு முட்டை விற்பனை; 64 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, ஓக. 26

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த 64 வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்பவர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 19ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி வெள்ளை முட்டையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகவும் சிவப்பு அல்லது கபில நிற முட்டையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# முதலாவது பூஸ்டர் தடுப்பூசி 60 இலட்சம் பேர் பெறவில்லை

கொழும்பு, ஓக. 26

கொரோனாவுக்கு எதிரான முதலாவது பூஸ்டர் தடுப்பூசியை பெறாத சுமார் 60 இலட்சம் பேர் இன்னும் நாட்டில் இருப்பதாக தொற்று நோயியல் பிரிவின் தலைவர் மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய கொரோனா தொற்று அபாயத்தை கருத்திற்கொண்டு பெற வேண்டிய தடுப்பூசிகளை உடனடியாக எடுத்துக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (அ)

# நீதிமன்றில் மன்னிப்பு கோரினார் ரஞ்சன்!

கொழும்பு, ஓக. 26

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று நீதிமன்றில் சத்தியக் கடதாசி சமர்ப்பித்து மன்னிப்புக் கோரியுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்தது தொடர்பான முதலாவது வழக்கு தொடர்பாகவும், இரண்டாவது வழக்கு தொடர்பாகவும் நீதிமன்றத்திடம் மன்னிப்புக் கோருவதாக வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் கூறிய கருத்துக்கள் முற்றிலும் தவறானவை என்றும், அந்த அறிக்கையால் பிரதம நீதியரசர் மற்றும் சட்டத்துறையில் உள்ள அனைவருக்கும் அவமரியாதை ஏற்பட்டதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்றும் அந்த வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் கூறிய கருத்துக்கள் பொய்யானவை எனவும், அந்த அறிக்கைகளை மீளப் பெறுவதாகவும், எதிர்காலத்தில் அவ்வாறான கருத்துக்களை வெளியிடப் போவதில்லை எனவும் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றில் வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# கோட்டா நாடு திரும்புவாரா? எதுவுமே எனக்கு தெரியாது

## கை விரிக்கிறார் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஓக. 26

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எப்போது நாடு திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. நாடு திரும்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்."

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது: -

கோட்டாபய ராஜபக்ஷ தனது சுயவிருப்பின் பிரகாரம் நாட்டை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்திருந்தார். தற்போது அவர் முன்னாள் ஜனாதிபதி. முன்னாள் ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்கள் அவருக்கு உண்டு. இந்நிலையில், அவர் எப்போது நாடு திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. நாடு திரும்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்.

அவர் நாட்டுக்கு வந்தால் அரசியலில் ஈடுபடுவரா? இல்லையா? என்பது தொடர் பில் அவர்தான் தீர்மானம் எடுக்க வேண்டும்- என்றார். (அ)

# மொட்டு கட்சியினரை பேர வாவியில் தள்ளிய பெண்ணுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 26

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் குழுவொன்றை கடந்த மே 9 ஆம் திகதி பேர வாவியில் தள்ளிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேக நபரை அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்த உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், அன்றைய தினம் அவரை அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.00 அணி :இயற்கை வழி



07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
10.00 மணி : நேருக்கு நேர்

---

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**ஓம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு